


# தமிழ் அறிந்த மன்னர்

நீலகண்டன்

CLS

# தமிழ் அறிந்த மன்னர்

அன்புருவினரும் அருளாளரும் எனக்கு
நல்வழி காட்டியருளிய ஆசிரியப் பெருந்
தகை [illegible] அன்பளிப்பு
K.T. நீலகண்டன்
5.5.55.

ஆசிரியர்

வித்துவான் K. T. நீலகண்டன், M.A.

THE MADURA TA

THE CHRISTIAN LITERATURE SOCIETY

THE CHRISTIAN LITERATURE SOCIETY
*(In association with the United Society for Christian Literature)*
POST BOX 501, PARK TOWN, MADRAS 3
*and at*
MYSORE BANGALORE TIRUVALLA

S.B.
*COPYRIGHT*
*First printed, 1954*

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1954. B936

## உரிமையுரை

அன்புவடிவான முதுபெரும்புலவர் ஆசிரியர் புலவரேறு அ. வரதநஞ்சையம் பிள்ளை அவர்கள் பொன்னார் திருவடிகட்கு இச்சிறு நூலை பணிவுடன் உரிமையாக்குகின்றேன்.

ஆசிரியர்.

# முன்னுரை

"மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி" என்பது பழமொழி. நாடாளும் மன்னன் அறிவுடையவனாயின் அவன் நாட்டு மக்களும் அறிவுடையவராக விளங்குவர். நம் நாட்டினை ஆண்ட பழங்காலத் தமிழ் மன்னர்களுள் பலர் தம் தாய் மொழியாகிய தமிழை நன்கு வளர்த்தனர். தமிழறிஞர்களைப் போற்றினர்; புரந்தனர். தாமும் தமிழ்ப் புலவர்களாக விளங்கினர். இங்ஙனம் புலமை பெற்றுப் புரவலர்களாக விளங்கியவர்களின் வரலாறுகள் சிறிதளவாயினும் நாம் அறிந்துகொள்ள உதவுவன இன்று நமக்குக் கிடைக்கும் சங்க இலக்கியங்களே. அவற்றில் புலவர்கள் பாடிய பெருமையுடன் விளங்கிய மன்னர் பலரை—புறநானூறு போன்ற நூல்களில்—சங்க கால வரலாறுணர்த்தும் நூல்களில் பரக்கக் காணலாம். இவ்விலக்கியங்களில் ஆங்காங்கே மன்னர்கள் பாடிய பாடல்களும் இடம்பெற்றுத் திகழ்கின்றன. அப்பாடல்களையும், அப்பாடல்களை இயற்றிய வேந்தர்களைப் புகழ்ந்து புலவர்கள் பாடிய பாக்களையும், துணையாகக் கொண்டு எழுதப்பட்டது இந்நூல்.

தமிழ்மொழி, முதன் மொழியாக இடம் பெற்றுள்ள இக்காலத்திலாயினும் தமிழ் மாணவர்கள் தமிழ்மொழிப் பற்றுடையராதல் வேண்டும். இந்நூல் மாணவர்கட்குப் பழங்காலமாகிய சங்க காலத்தில், நாடாண்ட மன்னர்களின் புலமையையும், அக்கால நாட்டின் நிலையையும், மக்களின் நாகரிகம், ஒழுக்கம் முதலியவற்றையும் அறிய உதவிசெய்யும் என்னும் எண்ணத்துடன் எழுதியுள்ளேன். தமிழ்த் தொண்டர்களும் தமிழ் ஆசிரியப் பெருமக்களும் இந்நூலினை மாணவர்க்குப் பயன்படுத்துவதன் மூலம் ஆதரவு தருவரென நம்புகிறேன். இந்நூலை, எழுதி வெளியிட உடனிருந்து உதவிய வித்துவான், திருவாளர் M. நாராயணவேலு அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன். இந்நூலை அழகுற அச்சிட்டு வெளியிட்ட பதிப்பகத்தாருக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆசிரியர்.

## பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. தமிழ் கூறும் நல்லுலகம் | ... | ... | 1 |
| 2. அறிவுடை நம்பி | ... | ... | 18 |
| 3. இளம்பெருவழுதி | ... | ... | 33 |
| 4. கிள்ளிவளவன் | ... | ... | 46 |
| 5. நெடுஞ்செழியன் | ... | ... | 67 |
| 6. நலங்கிள்ளி | ... | ... | 81 |

THE MA... TAMIL

# தமிழ் கூறும் நல்லுலகம்

## தமிழ்நாடு

அமிழ்தினும் இனியது நம் தமிழ் மொழி. இம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட நாம், வாழ்கின்ற இந்நாடு, தமிழ்நாடு என வழங்கப்படுகின்றது. இத்தமிழ் நாட்டிற்கு வடக்கே திருவேங்கட மலையும் தெற்கே கன்னியாகுமரி முனையும் கிழக்கும் மேற்கும் கடல்களும் எல்லைகளாக விளங்குகின்றன. இவ்வெல்லைகளுக்குட்பட்ட நிலப்பரப்பு சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே "பனம் பாரனார்" என்ற பெரும் புலவரால் "தமிழ் கூறும் நல்லுலகம்" எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

பனம் பாரனார் என்பவர் தமிழ் முனிவர் எனப் புகழப்படும் அகத்தியரிடம் கல்வி பயின்ற மாணவர் பன்னிருவருள் ஒருவர்; தொல்காப்பியனாருடன் பயின்ற பெருமையுடையவர்; தொல்காப்பியர் இயற்றிய இலக்கணநூலுக்குப் பாயிரம் இயற்றி அழியாப் புகழ் எய்தியவர். இவர் இயற்றிய பாயிரச் செய்யுளால் அறியப்படும் செய்திகள் அரிய உண்மைகளை உணர்த்துவன.

## தமிழகத்தின் தோன்மை

நிலநூல் வல்லுநரும் ஏனைய ஆராய்ச்சியாளரும் முதன்முதல் உயிர்கள் தோன்றிய இடம் நம் தமிழகமே எனக் கூறுகின்றனர். ஓரறிவுயிர்கள் முதல் ஆறறிவுயிர்கள் வரை, தோன்றுவதற்கு இன்றியமையாது வேண்டப்படும் தகுந்த வெப்ப தட்ப

நிலைகளை நம்நாடு கொண்டுள்ளமை பற்றியே அன்னார் அங்ஙனம் கருதுகின்றனர்.

அன்றியும் இப்போதுள்ள பெருநீர்ப் பரப்பாகிய இந்துமாக்கடல் பகுதி, "குமரிக்கண்டம் என்ற பெயருடன் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னர் பெருநிலப் பரப்பாக விளங்கியது என்றும், அந் நிலப்பரப்பு ஆஸ்திரேலியாக் கண்டத்தின் மேற்குக் கரைமுதல் ஆப்ரிக்காக் கண்டத்தின் கிழக்குக்கரை வரை பரந்திருந்தது என்றும், இப்பரந்த நிலப் பகுதி கடலால் கொள்ளப்பட்டபோது அப்பகுதியினின்றும் மக்கள் பெயர்ந்து சென்று வெவ்வேறு இடங்களில் குடியேறினர் என்றும் அறிஞர்களால் கூறப்படும் ஆராய்ச்சி உரைகள் அவர்கள் கூற்றுக்கு அரண் செய்கின்றன. இவ்வாறு, வாழ்வதற்கு வேண்டிய சாதனங்களைத் தேடி உலகமெங்கும் பரவி வாழ்ந்த மக்கள், சென்ற இடங்களில் உள்ள பருவ மாறுபாடுகளுக்கும், வெப்ப தட்ப நிலைகளுக்கும் ஏற்றவாறு உணவு, உடை, மொழி, வாழ்வு ஆகிய அனைத்திலும் ஒருவருக்கொருவர் மாறுபட்டவராயினர் என்பர் ஆராய்ச்சியாளர்.

## தமிழகப் பிரிவுகள்

இக்கொள்கை ஏற்றுக்கொள்ளப்படின் நம் நாடு பழங்காலத்தில் உலகிற்கே வழிகாட்டியாக விளங்கியது எனவும், நாகரிகத்தை உலகினருக்கு உணர்த்தியது எனவும் நாம் பெருமையும் பெருமிதமும் கொள்ளலாம் அன்றோ! இத்தகைய வரலாற்றுப் பெருமையுடைய நம் நாடு முற்காலத்தில் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, சேர, சோழ, பாண்டிய மரபில் வந்த மும்முடி மன்னர்களால்

ஆளப்பட்டு வந்தது. அவர்கள் முறையே சேரர், சோழர், பாண்டியர் என அழைக்கப்பட்டனர். கோயம்புத்தூர் மாவட்டம், சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதி, திருவிதாங்கூர், கொச்சி, மலையாளம் ஆகிய இவை அடங்கிய பகுதி சேரர் ஆட்சிக்குட்பட்ட சேரநாடு ஆகும். இதற்குத் தலை நகரம் வஞ்சிமா நகர் எனப்படும். வஞ்சியிலிருந்து ஆட்சி புரிந்த சேர மன்னர்களுக்கு "வானவர்" "பொறையர்" என்ற வேறு பெயர்களும் உண்டு.

சோழர் ஆண்ட சோணாடு, வடக்கே சிதம்பரத்திற்கருகில் ஓடும் வட வெள்ளாற்றிற்கும், தெற்கே தென் வெள்ளாற்றிற்கும் இடைப்பட்ட நிலப்பகுதியாகும். தஞ்சை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் இதன் கண் அடங்கும். இப்பகுதியில் ஓடும் காவிரியாறு இந்நாட்டினைச் "செவிலித்தாய்" போன்று வளம் படுத்துகின்றது. எனவே, இந்நாடு "செவிலித்தாய் என்ன ஓம்பும் தீம்புனற் கன்னிநாடு" எனச் சான்றோர்களால் புகழப்படும் சிறப்புடையதாகின்றது. இந்நாட்டின் தலைநகரங்கள் உறையூர், காவிரிப்பூம்பட்டினம் என்பன. 'வளவர்' என்ற பெயராலும் சோழர் அழைக்கப்பட்டனர்.

பாண்டியநாடு தென் வெள்ளாற்றை வட எல்லையாகவும், குமரி முனையைத் தென்னெல்லையாகவும், வங்காளக்குடாக் கடலினைக் கிழக்கு எல்லையாகவும், திருவிதாங்கூரை மேற்கெல்லையாகவும் கொண்டது. மதுரை, இப்பாண்டி நாட்டின் தலை நகராகும். துறைமுகப் பட்டினம் கொற்கை. இக்கொற்கைத் துறை முத்துக்குளிக்கும் தொழிலுக்கு இருப்பிடமாக விளங்கியது. இங்கு எடுக்கப்படும் முத்துக்கள்

எல்லாச் சிறப்புக்களும் கொண்டனவாதலால் மேலை நாட்டு மகளிர் தம்மை ஒப்பனை செய்துகொள்ளுதற் குரிய பொருள்களுள் ஒன்றாக இம்முத்துக்களை மதித்து மிக்க விலைகொடுத்து வாங்கி யணிந்தனர்.

தொண்டை நாடு என்பது சோழ நாட்டின் வட பகுதியே. இந்நாட்டின் எல்லைகள்: வடக்கே வேங்கடம்; கிழக்கே கடல்; மேற்கே பவளமலை; தெற்கே பிணாகி மலை. இவ்வெல்லைகளுக்கு உட் பட்ட இருபதின் காவதப் பரப்புடைய இது, "தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோ ருடைத்து" என்று ஔவையால் புகழ்ந்து கூறப் படும் சிறப்பினை உடையது. காஞ்சிபுரம் இத் தொண்டை மண்டலத்தின் தலைநகராகும். இத் தொண்டை நாட்டினையடுத்து "நடு நாடு" "மங்கை நாடு" "கம்ப நாடு" என்று வழங்கப்பெறும் சிறு பகுதிகளும் இந்நாட்டினைச் சேர்ந்தனவேயாம்.

## தமிழ் மொழியும் அதன் வளர்ச்சியும்

இத்தகைய சிறப்புடைய நாட்டில் வாழ்ந்த நம் முன்னோர்கள் தமக்கெனப் படைத்துக்கொண்ட மொழி தமிழ்மொழி. அது படிப்படியாக வளர்ந்து இலக்கண இலக்கிய வளம்பெற்று, உலகில் வழங் கும் உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்றாக விளங்கு கின்றது. அம்மொழி இந்தச் சீரிய நிலை எய்தக் காரணமாக இருந்த நம் முன்னோரின் பெருமுயற்சி பெரிதும் பாராட்டத்தக்கதாகும். நம் முன்னோர், மொழியை வளர்க்கக் கையாண்ட முயற்சிகளுள் மிகச்சீரியது, தாம் வாழ்ந்த இடங்களில் பலர் ஒன்று சேர்ந்து சங்கங்கள் நிறுவியதேயாம். அச்சங்கங் களில் அங்கம் வகித்தோர் யாவர்? அவர்கள் எங்

னம் மொழியை வளர்த்தனர்? அவர்கள் இயற்றிய நூல்கள் எவை? என்பனபோன்ற செய்திகளை "இறையனார் அகப்பொருள்" என்னும் நூலில் பரக்கக் காணலாம்.

## முச்சங்கம்

தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் எனத் தமிழ்ச் சங்கங்கள் மூன்றுமுறை நடந்தன. அச்சங்கங்களை நிறுவியவர்கள் முறையே காய்சினவழுதி, வெண்டேர்ச்செழியன், முடத்திரு மாறன் ஆகிய வேந்தர் ஆவர். கடலால் கொள்ளப் பட்ட மதுரையிலும், கபாடபுரத்திலும், உத்தர மதுரை எனப் பழங்காலத்தில் வழங்கப்பட்ட இப் போதுள்ள மதுரையிலும் இம்முச்சங்கங்களும் முறையே நிறுவப்பட்டு நடைப்பெற்றன என்பர். இச்சங்கங்களில் அங்கத்தினராக விளங்கியோருள் அகத்தியரும், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றம் எறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், தொல்காப்பியனாரும், சிறுபாண்டரங்கனும், மோசியும், திரையன் மாறனும், சிறு மேதாவியாரும் சேந்தம் பூதனாரும் அறிவுடை அரனாரும் பெருங் குன்றூர்க்கிழாரும் உள்ளிட்ட புலவர்கள் நூற்றுக் கணக்கினராவர். அவரால் பாடப் பட்ட நூல்கள் எத்துணை எத்துணையோ! பெயரளவில் இன்று நமக்குத் தெரிவன சில. அவை அனைத்தும் கடல் கோள்களாலும் நெருப்பாலும் அழிவுற்றன. மற்றும் சில நூல்கள் வலிய கரையான் களின் கொடிய பசிப்பகைக்கு இரையாயின. இத் தகைய அழிவுகளுக்கெல்லாம் தப்பிய சின்னூல் களே நமக்குப் பெரிய அரிய நூல்களாயின. அவை

எட்டுத்தொகை எனவும், பத்துப்பாட்டு எனவும், பதினெண்கீழ்க்கணக்கு எனவும் வழங்கப்படும் இலக்கிய நூல்களாம். இவையன்றி தொல்காப் பியம், இறையனுர் களவியல் என்னும் இலக்கணக் கருவூலங்களும் சங்கப் புலவர்களால் இயற்றப் பட்டனவே.

சங்க இலக்கிய மாண்பு

சங்க இலக்கியங்கள் அனைத்தையும் அவை கொண்டுள்ள பொருள் வேறுபாட்டால் இரு திறத்தனவாகப் பிரிக்கலாம். அவை அகப்பொருள் பகுதிகொண்ட நூல்கள், புறப்பொருள் பகுதி கொண்ட நூல்கள் என்பனவாம். இவற்றுள் அகப் பொருட் பகுதியாவது, களவு, கற்பு என இரு வகைத்து. களவாவது ஊழ் காரணமாக எல்லா குண நலங்களும் வாய்க்கப்பெற்ற ஒருவனும் ஒருத்தி யும் தலைப்படுதல் தொடங்கி வெளிப்பட வரைந்து கொள்ளும்வரை மறைந்தொழுகும் ஒழுக்கம்.

பின்னர் தலைவன் தலைவி ஆகிய இருவரும் வரைந்துகொண்டு, இல்லறம் நடத்தும் அறச் செல்வர்களாக விளங்க முடிவுசெய்து, பிறர் அறியா வண்ணம் உடன் போக்கில் மணந்தோ பெற்றோர் அறிய மணந்தோ இல்வாழ்வில் ஈடுபடுவது கற் பொழுக்கம் எனப்படும். இவ்வாறு இருவருக்கும் இடையே தொடர்பு ஏற்பட்ட நாள் தொடங்கி அவர்கள் மனை வாழ்க்கையிலிருந்து மக்களைப் பெற்று அறம் பல இயற்றி வாழும் வரையில் உள்ள நிகழ்ச்சிகள் பலவற்றைச் சங்கப் புலவர்கள், தாம் தாம் கண்ட இயற்கைக் காட்சிகளை இடை இடையே இடம்பெறச் செய்து அவற்றின் வழியாகவும்,

பிறவற்ருனும் பாடியுள்ள பாக்களும் அகப்பொருட் பகுதியினுடன் சார்த்தியே கூறப்படும்.

புறப்பொருட்பகுதியாவது, மக்கள் வாழ்க்கைக்கு உறுதுணையாகிய கருத்துடையன என்று புலவர்கள் இசைத்தபாக்களும், முடிமன்னர்களிடமும் வள்ளல் களிடமும் குறுநில வேந்தரிடமும் சென்று உலகில் புகழை நிலைநிறுத்துதற்குரிய வழிகள் பலவற்றை உணர்த்துவான் பாடிய பாடல்களும், போர் முரசறைந்து மக்களைப் பலியிடும் பணியில் ஈடுபட்டு முனைந்து நின்ற சினங்கெழு வேந்தரிடம் சென்று தணிவு செய்விக்கக்கூறிய அறவுரை பல கொண்ட பாடல்களும், நாட்டு நிலைமையையும், மக்கள் வாழ்க்கை நிலைமையையும் மன்னருக்கு எடுத்துக் கூறி, அவர் தமக்குரிய கடமைகளை உணர்த்திய செய்யுட்களும், வறுமையால் வாடும் தம் சுற்றத்தாருடன் சென்று, மன்னன் கொடைத்திறனையும் வென்றியையும் பாடிப் பரிசில் பெற்று மகிழ்ந்து பாடியனவும், தம்மைப் புரந்த வேந்தர்கள் இயற்கை எய்திய பின்னர் அவர், தமக்குச் செய்த சிறப்பினையும் நாட்டைப் புரந்த முறையையும் அவர் தம் வண்மையையும் நினைந்து, இரங்கிக் கூறிய கையறு நிலைச் செய்யுட்களும், நிலையில்லா இவ்வுலகில் நிலையானவையென்று கருதி போரிலேயே தம் வாழ்நாளைக் கழித்த வேந்தர் மறுமைக்குரிய அறம் பல இயற்றும்படிக் கூறிய பாக்களும் பிறவும் கொண்ட பகுதியாம்.

அழியும் இயல்பினதாகிய இவ்வுலகில் அழியாதனவாகிய அறமும், கற்பும், ஒழுக்கமும் ஆகிய பலவற்றை மக்களுக்கு உணர்த்தும் நீதி நூல்களும் புறப்பொருளின் கண் அடங்கும். எடுத்துக்காட்

டாகக் கூறத்தக்கன குறள், நாலடியார் போன்ற நீதி நூல்களாம்.

இத்தகைய கருத்துக்களைக்கொண்ட பாடல்கள் புலவர்கள் பலரால் இயற்றப்பட்டன. இவற்றை யெல்லாம் ஒருங்கு தொகுத்துக் கடைச்சங்கத்தி லிருந்த சான்றோர் நம்மவர்க்காகத் தொகை நூல்க ளாக வெளியிட்டனர். அவையே மேற்சொன்ன இருதிறத்தனவாகிய நூல்கள். இனி அவற்றின் விரிவைக் காண்போம்.

எட்டுத்தொகை நூல்கள்: நற்றிணை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை என்பன வாம். பத்துப்பாட்டு என்பது, புலவர் பலர் இயற்றிய ஒரு பத்துத் தனிப் பாடல்களைக்கொண்டு தொகுக்கப்பட்ட ஒரு தொகை நூலாம். அப் பாடல்களின் பெயர்கள்: திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப் பாலை, மலைபடுகடாம் என்பனவாம். பதினெண்கீழ்க் கணக்கு என்பது, பதினெண் சிறுநூல்களுக்குச் சேர்த்து வழங்கப்படும் தொகைப் பெயர். கீழ்க் கணக்கு என்பன, குறைந்த அடிகளை உடையன வாய், வெண்பா யாப்பினவாய், அறம் பொருள் இன்பங்கள் நுவன்று, அம்மை முதலிய அழகு கள் உடையனவாய் வருவன. இந்நூல்கள் அனைத் தும் சொல்லழகும் பொருளழகும் நிறையப் பெற் றுத் தமக்கிணை தாமே என்று கூறத்தக்க முறையில் அமைந்துள்ளன.

"நாலடி நான்மணி நானாற் பதைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

என்னும் வெண்பா பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் இவை என உணர்த்தும்.

இக்கருவூலங்களை வரலாற்றுக் கண்கொண்டு ஆராய்ந்து நாம் காணுங் காட்சியே பண்டைய சங்க காலத் தமிழகம். இந் நூல்களால் நாம், சங்க காலத் தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள், அவர் தம் நாகரிகம், பண்பாடு, மொழிநிலை, மக்கள் நடாத்திய இல்வாழ்க்கை முறை, அரசனின் ஆட்சி முறை, வாணிகப் பெருக்கம், பலவகைக் கலைகளையும் தமிழர் வளர்த்த முறைகள், புலவர்கள் மன்னரிடத்தில் பெற்ற பெருஞ் சிறப்பு, வேந்தர்தம் போர் முறைகள் முதலியன பற்றி அறியலாம். இனி அச்சங்க காலத் தமிழகத்தின் நிலையைப் பின்னர் காண்போம்.

## தமிழர் ஆட்சிமுறை

இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுசட்குமுன்னர், நம் நாட்டில் "முடியாட்சியே" நிலைபெற்றிருந்தது. அவ்வாட்சி அறம் திறம்பா நெறியில் மக்களின் நலங்களிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்து நடைபெற்று வந்தது. அரசர்கள் முடியணிந்து "குடிதழீஇக் கோலோச்சி" வந்தனர். அதனாற்றான் அம்மன்னரின் அடிதழீஇ நம் முன்னோர் வாழ்ந்தனர். அன்றியும் அவர்கள் அம்மன்னரைத் தெய்வத்தோடு ஒப்ப "இறைவன்" என்ற பெயரால் அழைத்து வந்தனர். தமிழரசர்

தம்மைத், "தெய்வத்தின் பிரதிநிதிகள்," "நாம் ஆள்வதற்காகவே படைக்கப்பட்டவர்கள்" என்று ஒரு காலத்திலும் எண்ணினவர் அல்லர்; தம்மைத் தம் நாட்டில் வாழும் குடிகளில் ஒருவராகக் கருதி வாழ்ந்தனர். காட்சிக்கெளியராய், மக்கட்குற்ற குறைகளைக் களைந்து, அவர்களைத் தம் வெண் கொற்றக் குடையின் தண்ணிழலில், குருளைகளைப் புறங் காக்கும் புலியைப்போலவும், கண்ணினைக்காக்கும் இமையைப்போலவும் காத்துவந்தனர். அன்றியும் அவர்கள் புலவர் பெருமக்களுடன் சங்கங்களில் தாமும் உரிமையுடன் ஒக்க வீற்றிருந்து, தீஞ்சுவைப் பாக்கள் பாடித் தமிழ் மொழியை வளர்த்தனர். தம் அவைக்களத்தே செந்நாப்புலவர் பலர் வீற்றிருத்தலைப் பெறுதற்கரிய பெருஞ் சிறப்பாகக் கருதினர். புலவர் பாடும் புகழுடையோராக விளங்க வேண்டும் என்று அவாவினர். மற்றும் கொடுங்கோல் அரசர்களும் புலவர்களாகிய சான்றோர்க்குத் தலைவணங்கி, அவர்கள் ஆணைப்படி ஆட்சி செய்து, பின்னர் செங்கோல் மன்னராகத் திகழ்ந்தனர்.

இன்றியமையாத போதெல்லாம் புலவர்கள், "அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்பதைத் தமிழ் மன்னர்கள் உணரும்படிச் செய்தனர். அவர்களை வாழ்த்தும்போது "நமர் எனக்கோல் கோடாது, பிறர் எனக் குணங்கொல்லாது, ஆண்மையும் மென்மையும் வண்மையும் உடையவராகி நீடு வாழ்க" என, செறுத்த செய்யுட்கள் செய்யும் தம் செந்நாவால் அறிவுரையும் கூறினார்கள். இவ்வாறெல்லாம் மன்னர்களைப் புலவர்கள் நெறிப்படுத்தி வாழ்ந்து வந்தனர்.

## புலவரும் புரவலரும்

இன்சொற்கூறி, நன்முகங்காட்டி, தம்மனையின் கண் வெறுப்பின்றி இருக்கச் செய்து, அவர்கள் தாமே அகல விரும்பினும் அனுப்ப மனமின்றிப் பிரியா விடை தந்து அனுப்பும் வள்ளல்களையே நாடிப் புலவர் செல்வர். பெருங்குணம் உடைய வள்ளல்கள் நெடுந்தூரத்தில் வாழ்பவராயினும் புலவர்கள் இடையேயுள்ள தொலைவினை ஒரு பொருட்டாகக் கருதுதலிலர். “பழுமரம் நாடிச் செல்லும் பறவையினம்போல்” விரும்பிச்செல்வர். செல்லும் நெறி மிக்க கொடுமை வாய்ந்ததாயினும் தளராது செல்லுதல் புலவர்கள் இயல்பு. அவர்கள் உள்ளத்தில் உள்ள நீங்கா அன்பு முன்ஈர்க்க தம் சுற்றத்தார் பசிப்பிணி போக்கும் கடமையுணர்ச்சி பின் உந்தப் போவார் போலும்! இங்ஙனம் சென்ற புலவர்கள் செவ்விய தம் நாவால் வள்ளல்களைத் தாம் அறிந்தவாறு பாடி, அவர்கள் அன்புடன் வழங்கும் பொருள்களைக் கொண்டு மகிழ்ந்துண்டு, எஞ்சியவற்றைப் பிறர்க்கு வரையாது வழங்கி வாழும் இயல்பினர் எனப் புறநானூறு கூறுகின்றது. இத்தகைய புலவர் மரபினைச் சேர்ந்தவர் புலவர் மோசிகீரனார்.

## அரசர் சேரரும் புலவர் மோசியும்

புலவர் மோசிகீரனார் தம் வறுமையைப் போக்கிக்கொள்ள பெருஞ் சேரல் இரும்பொறை என்னும் சேர வேந்தனிடம் செல்ல விழைந்தார். சேர மன்னனிடம் சென்றால் வறுமையைப் போக்குவதற்குரிய பரிசுகள் பெறலாம் என்ற தளராத நம்பிக்கை கொண்டார். செல்லவேண்டிய

வழியோ சுரம்பல நிறைந்தது. மிகவும் நீண்டது. எனினும் ஆறு செல்லும் வருத்தத்தைப் பொருட்படுத்தாது புறப்பட்டார்.

சேரனிடம் புறப்பட்ட மோசிகீரனார் பொறையனின் அரண்மனையை அணுகினார். உடனே உள்ளே செல்லவேண்டும் என்ற ஆவல் நிறைந்த உள்ளத்தினராகி அரண்மனை வாயிலில் சென்று நின்றார். அவர் முகப்பொலிவைக் கண்ட காவலர், அவரை ஒரு புலவர் என அறிந்து தடை செய்யாது வழி விட்டனர். உள்ளே சென்ற புலவர், மன்னன் இரும்பொறை ஆண்டில்லை என்பதை அறிந்தார். அவன் தன் வெற்றி முரசுக்கு நீராட்டு விழாச் செய்யச் சென்றிருந்தான். திங்கள் தோறும் ஒரு நன்னாளில் வெற்றி முரசினை நீர்த்துறைக்கு யானை மேல் எடுத்துச் சென்று, நீராட்டி, ஒப்பனை செய்து நகர்வலம் செய்வித்தல் வழக்கம். இச்செய்தியைப் பணியாளர் அறிவிக்க உணர்ந்தார் புலவர். வழி நடந்த களைப்பும் பசித்துன்பமும் சேர்ந்து இவரை வாட்டின. அருகில் இருந்த அறையில் சென்று, தம் களைப்பையும் மயக்கத்தையும் நீக்கிக்கொள்ளக் கருதினார். அவ்வறையில் பட்டினால் தைக்கப் பட்ட மெத்தையினைக் கொண்டு வெண்மையான மேல்விரிப்புடன் அழகாக விளங்கிய கட்டிலினைக் கண்டார். அது முரசுகட்டில் என அறியாததனால் அவர் அதன் கண் அமர்ந்தார். என்றும் அதைப் போன்று மெல்லிய கட்டிலின் கண் அமர்ந்து அறியாதவர் ஆதலாலும் களைப்பு மிகுதியினாலும் சிறிது நேரத்திற்கெல்லாம் புலவர் கட்டிலிலேயே படுத்து உறங்கிவிட்டார். பணியாளர்களில் பலர் வெளியே சென்றிருந்ததால் இருந்த சிலரும்

இதனைக் கவனிக்கவில்லை. இஃதிங்ஙனமாக, மன்னன், முரசுக்கு நீராட்டி, அதனை யானை மீதேற்றி, இன்னிசை முழங்க நகர்வலம் செய்வித்து அரண்மனை யடைந்தான். முரசுகட்டில் அமைந்துள்ள இடத்திற்கு வந்தான். கட்டிலில் குழிந்த கன்னங்களும் ஒட்டிய வயிறும் மாசுபடிந்த கால்களும் கொண்ட ஓர் உருவம் படுத்து உறங்கக் கண்டான்.

அவரை வறிஞனெனக் கருதிய சேரன், தன் உயிரினும் சிறந்ததாகக் கருதும் முரசு வைக்கப் படும் கட்டிலில் அயர்ந்துறங்குவோனை வாள் கொண்டு இருதுண்டாக்குவதே தக்க செயல் என்று குறுகினன். உற்றுநோக்க, படுத்திருப்பவன் வறிஞனல்லன், பெரும் புலவர் என்பதை அவர் முகப் பொலிவால் உணர்ந்தான். அவனை யறியாமல் வாள் கையினின்றும் கீழே விழுந்தது. கை நடுங்கியது. உடனே பணியாளரை அழைத்து மயில் தோகையால் செய்யப்பெற்ற கவரியைத் தருவித்து அப்புலவர் நன்ருக உறங்குமாறு, தன் முழவுத் தோளாச்சித் தண்ணென வீசத் தொடங்கினன். பெருஞ் சேரலின் தமிழன்பினை என்னென்பது! தமிழ்ப் புலவர்களிடம் அவன் கொண்ட பேரன்புக்கு இதனினும் வேறு எடுத்துக்காட்டு வேண்டுமோ? இச் செயலால் சேரன் தனக்கு என்றும் அழியாப் புகழ் தேடிக்கொண்டான். இஃதொன்றே அக்கால வேந்தர்கள் புலவர்கள் பால்கொண்ட பெருமதிப்பினைக் காட்டவல்ல சான்ருகும்.

வெற்றித்திருவென விளங்கும் முரசு வைக்கும் கட்டிலின்மேல், வேறு பிறர் இருந்து உறங்குவது பெருங்குற்றமாகும். அது செய்வோர் கொலைத்

தண்டத்துக்குரியோர் ஆவர். இஃது அக்கால அரச நீதியாம். இதனை அறியாதவர் அல்லர் நம் புலவர். எனினும் வழி நடந்த துன்பமும் பசிப்பிணியும் அவரைப் படுத்துறங்கச் செய்தன. பொறையன் அவரைக் கொலை புரியாது இனிதாக உறங்குமாறு அவர்க்குக் கவரிகொண்டு வீசலுற்ருன். இதிலிருந்து அவன், தன் வெற்றிச் சிறப்பினையும் ஏனைய அரச செல்வங்களையும் புலவரின் புலமை மாண்பை நோக்க, தாழ்ந்தனவாகவே கருதினுன் என்பது பெறப்படும். உறக்கத்தினின்றும் விழித்தெழுந்த புலவர் நிகழ்ந்ததை யுணர்ந்தார். "முரசு இருத்தற்குரிய மென்பூஞ் சேக்கைக்கண் அறியாதேறிய என்னை நின்வாளால் இரு துண்டங்களாகச் செய்யாதருளியது ஒன்றே, நீ தமிழ் முழுதும் அறிந்த சிறப்புக்குப் போதிய சான்ருகும். அதனேடமையாது, என்னை அணுகி வந்து முழவுத் தோள்கோண்டு கவரி வீசியதற்குக் காரணம் யாதுகொல்?" என அப்புலவர் கூறிப் பாராட்டியது மன்னனுக்கு மிகவும் பொருந்துமல்லவா?

பேரறிவாளர் துணைகொண்டு, இடையருது அவரோடு இருந்து வாழ்ந்துவந்த காரணத்தால், தமிழ் நாடாண்ட மன்னர்களுள் பலர், பெரும் புலவர்களாகவும் விளங்கினர். "மாந்தர்க்கு இனத்தியல்பதாகும் அறிவு" என்பது பொய்யா மொழியல்லவா? அம்மன்னர்கள் தம் நாட்டில் வாழ்கின்ற, "குடிமக்களாகிய உடம்பிற்குத் தாமே உயிர்" என்றுணர்ந்து ஆட்சி செய்யுமாறு புலவர் பெருமக்கள் தூண்டினர். இக்கருத்தை

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்"

என்ற புலவர் மோசிகீரனுர் பொன்மொழிகளிலே காணலாம்.

## தமிழகத்தின் வளம்

தமிழ்நாடு, முடிமன்னரால் ஆளப்பட்டு வந்த அக்காலத்தில் இருவகை வாணிகத்தாலும் பொருள் வருவாய் மிகப் பெற்றிருந்தது. அலை கடல் நடுவண் பல கலஞ் செலுத்திக் கடல் வாணி கஞ் செய்வதில் ஒப்பாரும் மிக்காரும் இன்றி நம் முன்னேர்கள் விளங்கினர். உள் நாட்டில் உழவும் நெசவும் மக்களின் சிறந்த தொழில்களாகப் போற்-றப் பட்டன. புலவர் ஒருவர், ஒருபிடி படியும் குறுகிய நிலத்தில் ஏழு ஆண் யானைகளைப் போற்-றிக் காப்பதற்கு வேண்டிய அளவு நெல் முதலிய தானியம் விளையும் நாடு என்று சிறப்பித்துக் கூறு வதிலிருந்து நம் நாட்டின் பண்டைய செழுமையை நன்குணர முடியும்.

"ஒருபிடி படியும் சீறிடம்,
எழுகளிறு புரக்கும் நாடு கிழவோயே"

என்பது புலவர் வாக்கு. ஒருபிடி படியும் சீறிடம் என்பதற்கு ஒரு பெண்யானை படுத்துறங்கும் சிறிய இடம் என்னுது ஒரு பிடியளவு நெல் விதைக்கப் படும் சிறிய இடம் எனக் கொள்வாரும் உளர். நம் மூதாதையர், பட்டினும் நூலினும் பாலாவி யினும் மெல்லிய மேலாடை நெய்தனர் என்பதை, "பாம்புரித்தன்ன வான்பூங் கலிங்கம்", "புகை விரிந் தன்ன பொங்குதுகில்" என்னும் செய்யுள் வரிகள் வலியுறுத்தும்.

## தமிழர் நேர்மையும் ஆண்மையும்

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்து ஒருபால் கோடாத சான்றோர், அறம் நின்று நிலைத்த அவையத்து, முறைவேண்டினோர்க்கும் குறைவேண்டினோர்க்கும் நீதி வழங்கினர். போரெனில் புகலும் புனைகழல் மறவர் போர் தொடங்கு முன்:

> "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
> பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
> தென்புல வாழ்நர்க்கு அருங்கட னிறுக்கும்
> பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
> எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மினென"

முரசறைந்து அறிவிக்கும் கொள்கையுடையவராய் இருந்தனர். போரில் தன்னை அழிக்கவந்த களிற்றின் மீது கையிலிருந்த வேலினைப் போக்கி, தொடர்ந்துவரும் யானைக் கூட்டத்தைக் கண்டு, எய்யப் படையில்லையே எனக் கருதியபோது, தன் மெய்யில் தைத்திருந்த வேலினைக் கையால் பரித்து மகிழ்ந்தானும் ஒரு தமிழ் மறவன். இக்கருத்தை,

> "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
> மெய்வேல் பறியா நகும்"

என்ற குறளில் காணலாம். அவ்வீரனைப்போன்ற வீரர் பற்பன்னூறாயிரவர் மலிந்திருந்தனர் நம் நாட்டில். புகழ் வருவதாயின் உயிரையும் கொடுப்பவர்களும், உலகமே எளிதிற் கிடைப்பதாயினும் பழிச்செயல் செய்ய ஒருப்படாதவரும் நிறைந்த நாடாக விளங்கியது நம் நாடு.

## தமிழகத்து வேந்தர்கள்

இவர்களையேயன்றித் தமிழகம் வள்ளுவர் போன்ற ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர் பலரைப் பெற்றிருந்தது. இன்னும் இசை, சிற்பம், ஓவியம் போன்ற நுண்கலைகளில் தேர்ச்சி பெற்ற அறிஞர்களால் அழகு செய்யப்பட்டும் விளங்கியது. இச் சிறப்புக்களையெல்லாம் தன்னகத்தே கொண்ட நாட்டினை ஆண்டுவந்த புரவலர்களுள் சிலர் பெரும்புலவர்களாகவும் விளங்கினர் என்று முன்பு கூறினேம். அவர்களுள் ஒரு சில வேந்தர்கள் பாடிய பாடல்களைக் கொண்டு அவர்கள் உள்ளக் கிடக்கையையும், அவர் தம் நுண்மாண் நுழை புலத்தையும், அவர் தம் போர்செய்யும் திறத்தையும், அறநெறி வழுவாது நாடாளவேண்டும் என்ற அவர் தம் உயர்ந்த குறிக்கோளினையும், கற்பு நிலையையும், புலவரைப் புரக்கும் பரந்த உள்ளத்தையும், உயிரினும் சிறந்ததாக அவர்கள் கருதிய ஒழுக்கத்தின் மேம்பாட்டையும் நாம் இனிக் காண்போம்.

# அறிவுடை நம்பி

## தமிழின் பெருமை

*"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியும்
சவுந்திர பாண்டியன் எனுந்திரு நாடனும்
சங்கப் புலவரும் தழைத்தினி திருந்த
மங்கலப் பாண்டி வளநாடு"*

என்று பாராட்டப் பெறுஞ் சிறப்புடையது பாண்டிய நாடு. அங்கு நடைபெற்ற தமிழ்ச் சங்கத்தில் புலவர் பலர் வீற்றிருந்தனர் என இலக்கிய இலக்கண நூல்கள் கூறுகின்றன. அப்புலவர்களுள் ஒருவராக இறையனுர் என்ற பெயருடன் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் விளங்கினர் என்று இறையனுர் அகப்பொருள் கூறுகின்றது. முக்கட் செல்வராகிய சிவபெருமான் ஏனைய புலவர்களுடன் ஒக்கவீற்றிருந்து ஆராய்ந்த பெருமையையுடையது நம் தாய்மொழி. இதனை மணிவாசகப் பெருமான், திருக்கோவையாரில் கூறுகின்ற திறம் மிக அழகியது.

*"சிறைவான் புனற்றில்லை சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழின்"*

என்பது அவர் அமுதவாக்கு. எனவே நம் பசுந்தமிழ் தெய்வத்தமிழ் எனப் போற்றப்படுவதற்கேற்ற தகுதியுடையதாகின்ற தல்லவா? அன்றியும், இறைவனும் விரும்பி ஆராய்தற்குகந்த இனிமையும், இலக்கிய இலக்கண கலைச்செல்வங்களும்,

நாகரிகமும் பண்பாடும் அழகும் அழியாத் தன்மையும் பொருந்தியுள்ள காரணத்தால், நம் மொழியை "என்றுமுள தென் தமிழ்" எனக் கம்பர் கூறுவது சாலவும் பொருந்தும் அன்றோ?

இப்பெருமைகளை எல்லாம் தன்னகத்தே பெற்ற நம் தமிழ் மொழியைப் பேசிவந்த மக்கள், உயிர்க்கு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய இந்நான்கினையும் உறுதிதரும் பொருள்கள் எனக் கண்டனர். இவற்றுள் வீடென்பது, சிந்தையும் மொழியும் செல்லாத் தன்மையது என்றும், துறவறமாகிய காரணவகையால் கூறப்படுவதல்லது, இலக்கண வகையால் கூறப்படாதது என்றும், நூல்களிற் கூறப்படுவன ஏனைய மூன்றுமே என்றும் கூறுவர். அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றனுள் நடுவணதாகிய பொருள் உண்டாயின் இவ்வுலகிலன்றி மறு உலகிலும் பயன்தரவல்ல அறம்பல இயற்ற முடியும். மற்றும் இவ்வுலகில் நுகரற்பாலனவாகிய இன்பங்களை நுகரவுங்கூடும். ஆதலால் அதன் சிறப்பிற்கேற்பப் பொருளைப் போற்றும் வகையில், அதற்குரிய இடமாக அறம், இன்பம் இவ்விரண்டினுக்கும் இடைப்பட்ட இடத்தை அளித்தனர் நம் முன்னோர். அத்தகைய மாண்புடைய பொருளைச் "செல்வம்" என்ற பெயராலும் நாம் செல்வமாக அழைக்கின்றோம்.

வரலாற்றுக்கு முற்பட்ட பண்டைக் காலத்தில் நம் முன்னோர் செல்வம் என்ற அழகிய மொழியால் தம் அன்பிற்குரிய எல்லாவற்றையும் அழைத்தனர். மற்றும் வாழ்விற்கு இன்றியமையாதவற்றையும் அச்செல்வம் என்ற சொல்லாலேயே அழைத்தனர். அச்செல்வத்தின் பிரிவுகளை ஆராயின், கல்விச்

செல்வம், பொருட்செல்வம், மக்கட்செல்வம், அருட்செல்வம் என்றும்; நிலம், நீர், ஆடு, மாடு என்றும் பற்பல பிரிவுகளாகப் பிரிக்கக்கூடும். இவை அனைத்தினும் கள்ளமற்ற உள்ளமுடையவ ராகிய நம் முன்னோர், ஒருவனின் செல்வ நிலையை அவனுக்குரிய ஆடு மாடு முதலிய இனங்களைக் கொண்டே கணக்கிட்டனர். அதனால் செல்வம் என்ற பொருளைக் குறிக்க, "மாடு" என்ற சொல்லும் வழக்கிற்கு வந்தது.

> "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
> மாடல்ல மற்ற யவை"

என்பது திருக்குறள். மற்றும் நம் மூதாதையர் தம் மக்களையும் அன்பு ததும்பும் மொழியால் செல்வங் களே! என்றழைக்கத் தலைப்பட்டனர் என்று கூற லாம்.

**மக்கட் பேற்றின் மாண்பு**

இல்லறம் இனிது விளங்க மக்கட்பேறு வேண் டும். ஆனால் நம் நாட்டில் மணம் செய்துகொள் வது மக்கட் பேற்றிற்கே என்ற அவல நிலையும் நிலவுகின்றது. பிள்ளைப் பருவம் மாறாத காலத்தும் பெற்றோர்கள் தம் மக்களுக்கு மணம் முடித்து வைத்து, அவர்களின் திருமணக்கோலத்தைக் கண்டு மனங் குளிர்கிறார்கள். தம்மையுமறியாது அவர்கள் நா வாழ்த்த ஆரம்பிக்கிறது. வாழ்த்தின் முடிவு, "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" என்பது. பெறுதற்குரிய பேறுகள் பதினாறனுள் மக்கட் பேறும் ஒன்று என்று கணக்கிட்டனர். சிலர் மணம் முடிந்து சில ஆண்டுகளுக்குள் மக்கட்பேறு வாய்க்கவில்லையேல் அதனைத் தமக்கு ஏற்பட்ட

பெருங் குறையாகக் கருதி, இரண்டாவது முறை யும் பெண் கொள்ள விரும்புகின்றனர். திருமணம் என்றெங்ஙனம் நாம் அதனை அழைப்பது?

மற்றுஞ் சிலர், தீர்த்த யாத்திரை செய்யக் கருதி புண்ணிய நகரங்கள் என்று கருதப்படும் காசி, மதுரை, திருப்பதி, காஞ்சி முதலிய இடங் களுக்குப் புறப்பட்டுப் போய் வருகின்றனர். பொன் னிருந்தாலும், மாடமாளிகைச் செல்வமிருந்தாலும், அரசிருந்தாலும், புகழிருந்தாலும், மகப்பேறு இல்லாக் குறையைப் பெருங்குறையாகக் கருதுகின் றனர் இவர்கள்.

> "மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
> நன்கலம் நன்மக்கட் பேறு"

என்பது பொய்யா மொழிதான். ஆனால் பிறக் கின்ற மக்கள் வள்ளுவர் கூறியாங்கு அறிவுடைய மக்களாக வன்றோ விளங்கவேண்டும். கோப் பெருஞ் சோழன் மக்களைப்போல வாய்ப்பின் யாது பயன்? அத்தகைய மக்களைப் பெறுவதினும் பெரு திருப்பதே பெரும் பேறன்றோ?

### பெற்றோரும் மக்களும்

இக்காலத்தில் நம்மவரில் பலர் தாம் பெற்ற மக்களை அறிவுடையராக்கிக் கண்டு மகிழவேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால் பெரும்பான்மை யோரிடம் அவ்வெண்ணம் பகற்கனவாய், தேய்ந்த கனவாய் முடிதல் கண்கூடு. ஏனெனின் அவர் களின் வறுமை நிலையும் சமூகக் கட்டுப்பாடுகளும் பண்டைய குலத்தொழிலைக் கைவிடாதபடி தடுக்கும் உள்ளமும் சூழ்நிலையும் பிற காரணங்களும் தடை செய்கின்றன. அதனைத் தாய் தந்தையர் தம் மக்களை

வளர்க்கும் முறையினின்றே அறியலாம். மகளிரி டையே கல்வி பரவக்கூடாது என்று எண்ணு வோர் இன்னும் நம் நாட்டில் பலர் வாழ்கின்றனர். அன்னையருக்கு—மாதவஞ்செய்து மங்கையராகப் பிறக்கின்ற மணிகளுக்கு—கல்வி மறுக்கப்படுகின் றது. அதிலும் சிற்றூர்களில் சோருக்கும் தொழிலைத் தவிர வேறு எத்தொழிலையும் கல்லாத் தாய்மார்கள், மேற்கூறிய பாதகர்களின் பேச்சைக் கேட்டு, அறி விழக்கின்றனர். மக்களைப் பெற்றவரில் எத்துணையர்,

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே"

என்று தொடங்கிப் பாடியவர் பொன்முடியார் என் னும் பெண்பாற் புலவர் என்பதை அறிந்திருக் கின்றனர்.

பெற்றோர்கள் கல்வியின் விழுப்பத்தை உணர்ந் தாலன்றி மக்கள் கல்வியைப் பெறுதல் யாங்ஙனம்? கல்வி யறியா மகளிர் வயிற்றுப் பிறந்த சேய்கள் கல்விச் சிறப்பை உணர வாய்ப்பேது?

மக்களினத்தின்—சமூகத்தின் கண்களில் ஒன் றாக விளங்கும் பெண்ணினம் கல்வி பெறுதவரை யில், மனித சமூகம் ஒரு கண்ணின் பார்வையை இழந்துள்ளது என்றன்றோ கூறவேண்டும்.

## கல்வியால் அரசர் பெறும் பயன்

இங்ஙனம் இரு பாலார்க்கும் இன்றியமையாச் சிறப்புடைய கல்வியை நாடாளும் அரசர் நன்கு கற்கவேண்டும் என்று அன்றோ கல்வி, கல்லாமை, கேள்வி என்ற அதிகாரங்களைப் பொருட்பாலில் அரசியலில் வைத்துள்ளார் தெய்வப் புலவர்.

அன்றியும் நிலனுள்பவருக்கு அமைந்திருக்க வேண்டிய பண்புகளெனக் கூறப்படுவனவாகிய அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், தூங்காமை, கல்வி, துணிவுடைமை ஆகிய இவ்வாறனுள் ஒன்ருகக் கல்வியையும் சேர்த்துக் கூறுகின்ருர்.

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனுள் பவர்க்கு"

என்பது குறள். மன்னன் கல்வி யுடையனுய வழி அவன் நாட்டில் வாழ்வோரும் புலமை பெற்று விளங்குவரன்றே? நாடு அத்தகைய உயர்நிலை எய்தக் காரணமாயிருந்த மன்னர்கள் பலர், நம் தமிழ் நாட்டைச் சங்க காலத்தில் ஆண்டுவந்தனர். அவர்களுள் ஒருவன், "பாண்டியன் அறிவுடை நம்பி" என்பவன். பாண்டிய நாட்டை ஆண்ட மன்னர்களுள் சிலர் நெறி தவறியும் ஆட்சி செய்துள்ளனர். குடிகளை வருத்தி இறைவாங்கும் கொடுங்கோல் மன்னராகவும் விளங்கினுர்கள். அவர்கள் ஆட்சியைத் தனி வழியே செல்பவரைத் தன் வேலினைக் காட்டி மருட்டிப்பொருள் பறிக்கும் கொள்ளைக் கூட்டத்தார் ஆட்சி என்கிருர் வள்ளுவர்.

அத்தகுதியற்ற மன்னர் ஆட்சியில் வாழ்வதை விடக் கொடும்புலி வாழும் காடே நன்று என்று நினைந்து அல்லற்பட்டு ஆற்ருது அழுதனர் குடிமக்கள். இந்நிலையில் நாட்டில் வாழும் குடிமக்களின் துன்பத்தினைத் தக்காங்கு நாடிப் புலவர் பெருமக்கள், அரசரிடம் சென்று எடுத்துக் கூறினர். தம் தவற்றினை உணர்ந்து, மன்னர் திருந்திய செங்கோலராக மாறினர். அவ்வாறு கூறின் அறிவுரைக்கும் அறவுரைக்கும் செவி சாய்க்கா மன்ன

ருக்குத் தமக்கே இறுதி நேர்வதாயினும் எஞ்சாது புலவர்கள், "மக்கள் அழுத கண்ணீர் கூரிய வாளாகி அரச செல்வத்தை அழித்துவிடும்" என் பதுபோன்ற உறுதி மொழிகளைக் கூறி வந்தனர். இங்ஙனம் கூறப்பட்ட அறிவுரைகளைக் கேட்ட பின்னரும் திருந்தாத மன்னனுயின் பாகனில்லாத யானைபோல நெறியல்லா நெறிச்சென்று கெடுப் பாரின்றியும் தானே கெடுவான் என்பதில் ஐயம் உண்டோ?

## நம்பியும் ஆந்தையாரும்

அறிவுடை நம்பி என்னும் மன்னன் பாண்டிய நாட்டை ஆண்டுவந்த காலத்தில், சோழநாட்டைக் கோப்பெருஞ்சோழன் என்னும் மன்னன் உறை யூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்தான். பாண்டிய நாட்டில் பிசிர் என்பது ஒரு சிற்றூர். அவ்வூரில் ஆந்தை என்னும் பெயருடைய சான் ரோர் வாழ்ந்துவந்தார். இவர் சோழனைப்பற்றிக் கேள்விப்பட்டுள்ளாரே அல்லாமல் கண்டறியார். சோழனும் இப்புலவரைக் கண்டறியாதவன். ஆனால் அவருடைய புலமை முதலிய நல்லியல்பு கள் அனைத்தையும்பற்றி நன்கு கேட்டறிந்தவன். எனவே இவ்விருவரும் ஒத்த உணர்ச்சியராகி நண்பராயினர்.

பிசிராந்தையார் அறிவுடை நம்பியாகிய தன் னாட்டு வேந்தனிடம் அன்புடையவராக ஒழுகாமல் வேற்றுநாட்டு வேந்தன்பால் தோழமைகொண்டார். இந்நிலைக்குக் காரணம் அறிவுடை நம்பிக்கு ஆந்தையாரின் அன்பைப் பெறுதற்குரிய நலம் இல்லையென்பது பெறப்படும். இப்பாண்டியன்

தன் குடிகளிடத்து இறைவாங்கும் நெறியிற் பெருந் தவறு செய்தான். இவன் ஆதரவு பெற்று வாழ்ந்த அரசியற் சுற்றத்தாரும் இவனை இடித்துரைத்து நெறிப்படுத்தும் நேர்மையின்றி இருந்தனர். "நீர் சாயும் வழி கோரை சாயும்" என்பது பழ மொழி. அவர்களும் மன்னன் விழைந்த வழிகளில் எல்லாம் நுழைந்து, கொடுத்து, நாட்டில் வாழும் மக்கட்குத் துன்பம் உண்டாக்கினர். அதனைப் பொருத சான்றோர் சிலர், பிசிராந்தையாராகிய புலவரை வேந்தன்பால் விடுத்து நல்லறிவு கொளுத்துமாறு வேண்டினர். அவரும் அரச னின் தகாச்செயல்களை ஆராய்ந்து, குடிகளை வருத்தி இறைகொள்ளும் குற்றம் மிக மிகக் கொடி யது என்பதையும், அவன்கீழ்ப் பணியாற்றும் அலுவலாளரும் அத்தீய வழியில் ஈடுபட்டுக் கொடுமை செய்வதையும், அவனிடம் உள்ள தீய பண்பே அவன் சுற்றத்தாரிடமும் இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட முடிவு செய்தனர். பல கூறுவானேன். அரசன் ஆடல் பாடல் துறை களில் தன் பொழுதினை வறிதே போக்கி வாழ்தலைக் கண்டு, அவனை நெறிப்படுத்துவது நாட்டிற்குத் தான் செய்யக்கூடிய சிறந்த தொண்டு என்பதை நன்கு உணர்ந்தார் புலவர். அவ்வளவே யன்றித் தன்னைப் போன்றவரின் கடமையும் ஆகும் என் பதை ஆழ்ந்து ஆராய்ந்து தம் எண்ணங்களை மன்னனிடம் சொல்லி மனத்தை மாற்றும் பெரு முயற்சியில் ஈடுபட்டார்.

புலவர் சென்று பாண்டியனைக் கண்டார். அர சன் நம்பி, பிசிராந்தையார் பெருமையை நன்கு அறிந்தவன். ஆதலின் அவரை விருப்போடு வர

வேற்றான். அச்சமயம் புலவர் தாம் பாடிக் கொணர்ந்த "காய்நெல் லறுத்து" என்று தொடங் கும் பாடலைப் பாடிக் காட்டி அப்பாண்டி வேந் தனைச் செந்நெறியிற் செலுத்திஞர். அவர் புலமை நலத்தைப் பாராட்டித் தன் தவறான செயல்களைக் குறித்து வருந்தியதுடன் தன் பெயருக்கேற்ப நல்லறிவுடைய நம்பியாய் மனம் மாறித் தன்னை நெறிப்படுத்தியமைக்கு நன்றி செலுத்தி, வணங்கி ஞன். ஆந்தையாரின் சொல்லும் பொருளும் மன்னவன் உள்ளத்தில் பாய்ந்து, அவனை முற்றி லும் நல்லவனாக்கின. அவர் ஆற்றல் (புலமை) பெரிதும் பாராட்டற்குரியது. கருதிய பயனை விளை வித்தது அப்புலமை நலம்.

## ஆந்தையார் அறிவுரை

பாண்டிய மன்னன் மனந் தெளிதற்குக் காரண மாயிருந்த புலமை நிறைந்த அப்புலவரின் பொன் மொழிகளை இனிக் காண்போம். "ஒருமா அளவி- னும் குறைந்த விளை நிலமாயினும் அதில் விளைந்த நெல்லை, அறுத்துக் கொணர்ந்து, கவளங் கவள மாகப் பெரிய ஆண் யானைக்கு உணவாக இட்டால் அந்நெல் பல நாட்களுக்கு வரும். இவ்வாறு செய்யா மல் யானைக்கென்று நூறுமா நிலத்தில் நெல் விதைத்து, அச்செய் நன்கு முற்றித் தலைசாய்ந்து, அறுவடைக்கு ஏற்ற நிலையில் இருக்கும்போது, யானையை அதில் மேயவிடின், அவ் யானையின் வாயுள் புகும் அளவினைவிட, அதன் கால்களால் மிதிக்கப்பட்டு அழியும் நெல் மிகுதியாகும். இவ் வாறே வேந்தனும் தான் பெறுதற்குரிய அர சிறையை நெறிப்படி முறையே கொள்ளின் நாடு

பெருவளம் படைத்துச் செல்வத்தால் சிறக்கும். அவ்வேந்தன் நாள்தோறும் குடிகள்பால் அன்பின்றி மிக்க இறையை வாங்கலுறுவானாயின் யானை புக்க விளை நிலம்போல அவற்கும் பொருள் சேராது, நாடும் கெட்டழியும்."

இம்மாண்பு மிக்க மொழிகளே மன்னனின் கொடுமை நிறைந்த மனத்தைச் செம்மைப் படுத்திச் செங்கோல் மன்னன் ஆக்கின. "பாண்டியன் அறிவுடைநம்பி" என்ற பெயருக்கேற்ற தகுதியைப் பெற்றான்.

**நம்பியின் புலமை**

பிசிராந்தையாரால் நெறிப்படுத்தப்பட்ட பாண்டியன் அறிவுடை நம்பி, மக்கட் பேறின்றி யிருந்து பின்னர் அப்பேற்றினைப் பெற்றான். பேரின்பம் உற்றான். புலவர் கூட்டுறவால், தான் பெற்ற புலமையைத் துணைக்கொண்டு அவ்வரும் பெறல் இன்பத்தைப் பிறர்க்கும் உணர்த்த விழைந்தான். அதனை ஓர் அழகிய செந்தமிழ்ப் பாட்டாகப் புனைந்தான்.

"படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே."

திணை — பொதுவியல் துறை — பொருண்மொழிக் காஞ்சி.

[படைப்பு—பெறுதற்குரிய செல்வம்; படைத்து—பெற்று; உடைப் பெருஞ் செல்வம்—உடைமை மிக்க செல்வம்; இடைப்பட—காலம் இடையே உண்டாக; இட்டுந் தொட்டும்—கலத்தின் கண்

கிடந்ததனைத் தரையினில் இட்டும் கூடப்பிசைந்து தோண்டியும்; கவ்வியுந் துழந்தும்—வாயால் கவ்வியும் கையால் துழாவியும்; அடிசில்—சோறு; விதிர்த்தும்—சிதறியும்; மயக்குறு மக்கள்—அறிவை இன்பத்தான் மயக்கும் மக்கள்; பயக்குறை இல்லை—பயனாகிய முடிக்கப்படும் பொருள் இல்லை.]

## குழந்தைகளும் புலவர்களும்

நெடுநாளாக மக்கட் பேறின்றிப் பொலிவிழந்த மனையில் மகவு பிறந்ததெனின் அம்மகவினைப் பெற்றோர் தம் கண்ணினும் பொன்னினும் சிறந்ததாகக் கருதியன்றே போற்றி வளர்ப்பர். அச்சேய் செய்யும் செயல் ஒவ்வொன்றிலும் தம் மனத்தையும் அறிவையும் ஒருங்கிழந்து, இன்பத்தில் திளைத்து நிற்பர். குழந்தைகளின் கை, கண், கால், வாய் முதலிய உறுப்புகள் ஒவ்வொன்றின் அசைவிலும் அழகு மிளிர்வதைக் கண் குளிரக் கண்டு ஒருவர் மற்றவர்க்குச் சொல்லி இன்புறுவர். அப்பிள்ளை பேசும் பொருளற்ற சொற்களுக்குப் பொருள் எனத் தம் அறிவுக்கு ஏற்றவாறெல்லாம் கற்பனைகள் பல செய்து பிறருக்கும் கூறுவர். அம் மகவினைத் தொட்டுத்தொட்டு முத்தங்கள் பல சொரிந்து எல்லையற்ற மகிழ்ச்சி யுறுவர். வள்ளுவர் கூறும், "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்" என்னும் மொழிகள் உண்மை; மறுக்கமுடியாத உண்மை என்றல்லவோ உணர்வர்.

மக்கட் பேறுபெற்று இன்பம் அடையும் பெற்றோர்கள் பலர். எனினும் அவர்கள் இவ்வழகிய முறையில் தாம் பெற்ற இன்பத்தைப் பிறர்க்கு எடுத்துக் கூறும் திறன் பெறுவது இயலாது. மழலை

மொழிகளைக் கேட்டு இன்புற்ற வள்ளுவர் பெருமான்,

> "குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
> மழலைச்சொற் கேளா தவர்"

என இழுமென் மொழியால் விழுமிய முறையில் கூறியுள்ளார். இதனை இன்னுஞ் சுருக்கி, 'குட்டிக் குறள்' என்னும் நூலின் ஆசிரியர், "குழலும் யாழும் மழலைமுன் குழைவ" என்கிறார். ஏனைப் புலவர்கள் கூருத, வேறு சில செய்திகளையும் பாண்டியன் தன் பாட்டினுள் குறிப்பாகக் கூறுகின்றான். அவை: ஒரு காலத்தில் (தந்தை என்னும் நிலை அடையு முன்னர்) பிறர் மக்கள் மண்ணில் படிந்து விளையாடுவதையும் தம் கைகளால் பலவாறு சோற்றைப் பிசைந்து கீழும் மேலும் அளாவி தரையினில் இட்டுப் பின்னர் தம் வாயிலிடும் செயல்களைக் கண்டு வெறுப்புக்கொள்ளும் ஒருவன், தானும் தந்தையான பிறகு, அவற்றையெல்லாம் மறந்து, மக்கள்பால் கொண்ட பேரன்பினால் அவர்கள் செய்யும் செயல்கள் எத்தகைய வாயினும் அவற்றைப் பாராட்டி, பொன் மொழிகளால் அம்மக்களுடன் கொஞ்சிக் குலாவி மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறான். இக்கருத்தை, 'அறிவையும் மயக்கவல்ல ஆற்றலுடையன' என்கிறார் அறிவுடை நம்பி. தான் உணவு உண்ணும் போது தன் மக்களையும் உடன் வீற்றிருக்கச் செய்து, அவர் தம் பூங்கையளாவிய உணவினை உண்டு மகிழ்ந்து, அமிழ்தினும் இனிமையுடையது என்று அனுபவித்துக் கூறுகின்றான் பாண்டியன். அவர்கள் செய்யும் செயல்களை "இட்டுந் தொட்டும்

கவ்வியும் துழந்தும், நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும், இடைப்படக் குறுகுறு நடந்து, சிறுகை நீட்டியும்'' என்ற அழகிய சொற்களால் கூறுகிறான். வேறொரு புலவர்,

"* * * தாமரைத்
தாதின் அல்லி அயலிதழ் புரையும்
மாசில் அங்கை மணிமருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வன்''

(அகம். 16)

என்று தம் சேயின் கையையும் மணிவாயையும் மழலைமொழியையும் பற்றி அழகாக உரைக்கின்றார். "செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சி'' யுடையவர் மக்கள் என்று கோசிகன் கண்ணனார் (அகம். 66) கூறுகின்றார்.

அரசன் நம்பி, செல்வ வாழ்வு என்பது தமித்து உண்டலின்றி விருந்தோடு உண்பதாற்றான் இன்பந்தருவதாகும் என்பதைக் கண்டான். அவ்வின்பத்தினும் இளஞ்சிறார் தம்முடைய சிறுகை நீட்டி, குறுகுறு நடந்து வந்து, தம் பெற்றோர் உண்ணும் உணவிற்றம் இருகைகளையும் இட்டும் தொட்டும் கவ்வியும் துழாவியும் தம் உடலெங்கும் சிதறியும் இன்பச் சிறுதொழில் புரிவதாலும், அவரால் சிதறப்படும் உணவை உண்பதாலும் உண்டாகும் இன்பம் பெரிதென அறிந்தான். மற்றும் அப்போது குழந்தைகள் தாம் செய்யும் சிறு செயல்களுக்கிடையே மிழற்றும் பொருளறிவாரா சொல்லும், செய்யும் செயலும் பெற்றோரின் கண்ணுக்கும் செவிக்கும் நாவிற்கும் உடம்பிற்கும் இன்பந்தந்து அறிவை மயக்குதலின்

இவ்வின்பக் காட்சியைக் கண்டும் கேட்டும் சுவைத்தும் பெறும் இன்பமே, "வாழ்வின் பயன்" எனத் துணிந்தான் இவ்வேந்தன். இத்தகைய நலம் சான்ற மக்களைப் பெருதார்க்கு வாழ்வின் பயனுகிய, "இன்றியமையாப் பொருள் இல்லை" என்று தன் பாட்டால் உலகிற்கு உணர்த்தினுன்.

## நம்பியின் பாவளம்

இப்பாட்டில் அம்மன்னன் எடுத்தாண்ட பொருள் செறிந்த செந்தமிழ்ச் சொற்களாகிய குழந்தைகள் நடக்கும் நடையைக் காட்டும் "குறுகுறு நடத்தல்" என்னும் சொற்களும், அவர்கள் நெய்யிட்டுப் பிசைந்த சோற்றில் தம் பூங்கை யிட்டுச் செய்யும் சிறு தொழிலை யுணர்த்தும் "இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும் நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்" என்னும் சொற்களும், படிப்பவர்க்கு இன்பக் காட்சிகளை மனக்கண் முன் கொண்டு வந்து காட்டும் சொல்லோவியங்களாக விளங்குகின்றன என்பதில் ஐயம் ஏது?

இதைப்போன்ற செய்யுள் பாடும் புலமையும் திறமையும் பிசிர் ஆந்தையார் போன்ற பெரும் புலவர் கூட்டுறவால் பெற்முன் பாண்டியன் அறிவுடை நம்பி எனின் அப்புலவர்க்கிருந்த செல்லுஞ் சொல்வன்மையும் தன்னுடன் பழகுவார் எத்தகைய கொடியவராயினும் சான்ருேராக ஆக்கவல்ல நல்லறிவு கொளுத்தும் திறனும் எண்ணி எண்ணிப் பார்ப்பவருக்கு இன்பூட்டுவன அன்ருே? "மாந்தர்க்கு இனத்தியல்பதாகும் அறிவு" என்னும் வள்ளுவர் கூற்றுப் பொய்யாமொழி அல்லவா? வாழ்க பாண்டியன் அறிவுடை நம்பியின் புலமை!

தவறுணர்ந்து திருந்தி, திருந்திய செங்கோல் வேந்தனாகி நாடு காத்ததோடன்றி அவன் பாடிய பாடலின் பொருளும் எத்தகையது என உன்னுமின்! யாது விளங்குகிறது? இறைவன் படைப்பில் உள்ள உயிர் வகைகளின் கூட்டம் அனைத்திலும் இளமைப் பருவத்திற்கு எப்பருவமும் ஈடாகாது என்பதும், அப்பருவத்தின் அழகில் தம்மறிவைப் பறிகொடாதவர் எவருமிலர் என்பதும், அவ்வழகு பெரு வேந்தனையும் தன்பால் ஈர்த்து, புலவனாகி ஆக்க வல்லது என்பதும் இனிது விளங்குகின்றன வன்றோ?

இத்தகைய அழகினை ஏன் செருநரும் விழைய மாட்டார்கள்? முகமும் கண்ணும் கனிவாயும் செய்யகையும் கால்களும் தாமரை ஒப்பன எனக் கூறும் புலவர் வாக்கில் உயர்வு நவிற்சியோ அன்றிக் கற்பனையோ யாண்டுள்ளது? முழுவதும் புலமைக் கண் கொண்டு பார்க்கும் திறமுடையவர்க்கே அறிவுடை நம்பியின் பாட்டும் உள்ளக் கிடக்கையும் இனிது விளங்கும்.

# இளம்பெருவழுதி

## பாண்டிய நாட்டுப் பெருமை

'பூழியர் கோன் தென்னாடு முத்துடைத்து' என்று தெய்வப் புலவர் ஔவையாரால் சிறப்பிக்கப்பட்டது பாண்டிய நாடு. அத்தகைய சிறப்பு வாய்ந்த நாட்டினர், தம் நாட்டின் கிழக்கெல்லையாகிய கடலை நன்கு பயன்படுத்திக் கடல்படு செல்வங்கள் அனைத்தையும் கொண்டுவந்து குவித்தனர். மரக்கலங்கள் பல செலுத்திக் கடாரம் ஈழம், சாவகம் என்னும் வெளி நாடுகட்குச் சென்று, சிறந்த வாணிகஞ் செய்தனர். தேவை ஏற்பட்ட போது அரசன் ஆணைப்படி வீரர் பலர் படை கொண்டு கலம் ஊர்ந்து, போர்செய்து, பிறநாடுகளை அடிப்படுத்தி வாகை சூடித் திரும்பினர். பிற நாட்டவரும் இடையறாது பாண்டிய நாடு போந்து பெருவாணிகஞ் செய்து மீண்டனர். கடற்கரையில் வாழும் நெய்தல் நிலமக்கள் மீன்பிடித்தல், முத்துக்குளித்தல் போன்ற தொழில்களில் முற்றுந் துறை போகியவராக விளங்கினர். அரசரும் அவர்களுக்கு வேண்டிய ஆதரவளித்து அவர் தம்மை ஊக்கினர். பிறநாடுகளை வென்று வெற்றிக் கொடி நாட்டிப் பொருள்களைக் கொள்ளை யடித்துத் தம் நாடு திரும்பும் கொள்ளைக் கூட்டத்தவராகத் தமிழரசர்கள் ஒரு காலத்திலும் வாழ்ந்திலர். அவர்கள் பகைவர்களை வென்று வாகைசூடிய பின்னர் அந்நாடுகளை முறைப்படி ஆளுதற்குரியவர் எவரோ

---

* கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

அவரை யழைத்துச் செங்கோல் ஆட்சி நடத்தும் மன்னராக ஆக்கினர். அவர்களுக்கு நீதிதவருது ஆளவேண்டிய கடமையை அறிவித்தும் உணர்த்தி யும் நல்லரசு நிறுவினர். இச்செய்திகளைக் கடாரம் (பர்மா), ஈழம் (இலங்கை) போன்ற நாட்டு வர லாறுகள் கூறுகின்றன.

## இளம்பெருவழுதி கடலுள் மாய்ந்ததன் காரணம்

கடல்கடந்து பிறநாடு சென்று போர்செய்ய வேண்டிய காலத்தில் கலங்களில் அரச குமரர் வீரர்களை அணி வகுத்து அழைத்துச் செல்வதும் உண்டு. கலங்கள் இக்காலத்தைப் போலன்றி, வாய்ப் பாகக் காற்று வீசும்போதே பாய்விரித்துத் துறை முகத்திலிருந்து புறப்படும். எதிர்பாராமல் கடல் நடுவண் புயல்காற்று, திமிங்கலம் போன்றவற்ருல் கலங்கள் அலைப்புண்டு மூழ்கிப்போதலும் உண்டு.

பாண்டிய வேந்தருள் இளம்பெருவழுதி என் பான் ஒருவன். இம்மன்னன் இளமையிற் கற்கத் தகுந்த நூல்கள் அனைத்தையும் ஐயம் திரிபின்றிக் கற்று அக்கல்விக்குத் தக்கவாறு வாழ்ந்து, சான் ரோர்களால் பெரிதும் போற்றப்பட்டவன். அன்றி யும் இவன் பாவியற்றும் புலமையும் பெற்றுச் சிறந்து விளங்கினன். இத்தகைய மேலோனாகிய இவ்வழுதி இயற்றிய பாடலொன்று புறநானூற்றில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இவ்வழுதி அவ்வப் பொழுது பாடிய பாட்டுக்கள் சான்ரோர்களால் பெரிதும் போற்றப்பட்டு வந்தன. அத்தகைய நலம் வாய்ந்த அவன் கலம் ஊர்ந்து செல்கையில் அக்கலம் கவிழ்ந்து மாண்டானாதல்வேண்டும். அதுபற்றியும் இப்பெயருடைய வேறு மன்னர்களி

ணின்றும் இவனைப் பிரித்தறிதற் பொருட்டும் "கடலுள் மாய்ந்த" என்ற அடைமொழி கொடுத்து வழங்கினர் போலும். பண்டைக்கால மன்னர்களுள் ஒரே பெயருடையவர் பலர் வாழ்ந்திருந்தனர். அவர்களை வேறுபடுத்தி யறிவதன்பொருட்டு நம்முன்னோர் அம்மன்னர்களின் இயற்பெயர் முன்னர் அவர்கள் துஞ்சிய இடங்களின் பெயர்களைச் சேர்த்து வழங்கினர் என்று துணியலாம். எடுத்துக் காட்டாகக் கிள்ளி என்ற பெயருடைய மன்னர்கள் பலர் வாழ்ந்தனர் என்பதைச் சங்க இலக்கியங்களில் பரக்கக் காணலாம். அவர்களை வேறுபடுத்தி யறிவதற்காக, 'இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய கிள்ளி', "குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளி", "குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி", "நலங்கிள்ளி", "நெடுங்கிள்ளி" என்று அடைமொழிகளுடன் சேர்த்து அவர்கள் குறிக்கப்பட்டனர் என்பதை நாம் காணலாம்.

வழுதியின் புலமை யுள்ளம்

"இளம்பெருவழுதி" என்ற தொடரிலிருந்து நாம் ஒரு கருத்தை ஊகித்தறியலாம். அது இளமைப் பருவத்திலேயே பேரறிவுடையவனாக விளங்கினமையின் இளம்பெருவழுதி என்ற பெயரால் அழைக்கப்பட்டிருக்கலாம் என்பதே. இவன், எட்டுத் தொகை நூல்களில் ஒன்றாகிய பரிபாடல் என்னும் நூலில் பதினைந்தாம் பாடலை இயற்றினான் என்பர் ஆராய்ச்சியாளர். அப்பாட்டில் இவன் மலைகள் பலவற்றுள்ளும் திருமாலிருஞ் சோலைமலை சிறந்த தென்று அழகாக எடுத்துக் காட்டியுள்ளான். அம் மலை திருமால்போல்வது எனக் கூறியிருப்பதும், அம்மலையிலிருந்து தோன்றும் சிலம்பாறு மாயவன்

கழுத்திலிட்ட மாலைபோன்று விளங்குகிறது என உரைத்திருக்கும் அழகும், அம்மலையில் எழுந்தருளி யிருக்கும் கண்ணபிரானும் பல தேவரும் உருவத் தால் இருவராயினும் தொழிலால் ஒருவரே என் பதை விளக்க கூறியுள்ள உவமை நயமும் நம் வழுதியின் தெய்வப் பற்றையும் கவியுள்ளத்தையும் காட்டுகின்றன.

இவன் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனு கவே வாழ்ந்தான். "மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி" என்னும் பழமொழிக் கிணங்க அவன் நாட்டுக் குடிகளும் தமக்குப் புகழ் கிடைப்பதாயின் தம் உயிரையும் இழக்கத் துணிந்து நின்றனர். உலகமே எளிதில் பரிசாகக் கிடைப்பதாயினும் பழிச் செயல்செய்ய ஒருப்பட்டிலர். இவ்வேந்தன் தன்னைப்போலவே தன்னுட்டு மக்களும் இறைவன் திருவருள் பெற்றுய்தல்வேண்டும் என்னும் நல் லெண்ணம்கொண்டவன். இக்கருத்தை அவன் பாடிய பரிபாடலின் இறுதியில், "கண்டோருடைய மயக்கத்தை யறுப்பது இம்மலை. ஆதலால் இம் மலைக்குச் சென்றேனும், இயலாவிடின் திசை நோக்கியேனும் குடும்பத்துடன் வழிபடுமின்" என்று உலகத்தவரை நோக்கிக் கூறும் அவன் அன்பு மொழிகளால் உணரலாம்.

வழுதி கடலுள் கலங்கவிழ்ந்து மாய்வதன் முன்னர் சான்ருேரின் சால்புகளை ஒரு பாட்டில் வியந்து கூறுகின்ருன். "உலகெனப்படுவது உயர்ந் தோர் மேற்றே" என்பது நம் முன்னேர்கொண்ட கொள்கை. உயர்ந்தோர் எனப்படுவார் பிறர் நோய் கண்டு, அதனைத் தமக்கு வந்ததாகவே கருதி, எரி யின் இழுதாகி அத்துன்பந் துடைப்பதற்காக

முனைந்து நிற்பவராவர். அவரிடம் தந்நலம் என்னும் குறுகிய மனப்பான்மை எங்ஙனம் காணப் பெறும்? அவர்கள், தாம் உயிர் நீப்பதாயினும் பிற உயிர்களை நீக்கும் வினைசெய்யார். அந்நல்லோர், தமக்கின்னா பிறர் செய்யினும் தாம் அவர்க்கு இனியவே செய்யும் சால்புடையவர்கள். இவ் வியல்புடையவர்கள் ஒரு சிலராவது உலகில் வாழ்த லாற்றான், இவ்வுலகம் நிலைபெற்று இருக்கின்றது என்பது இவ்வேந்தன் கருத்து. அவர்கள் இவ் வுலகில் வாழவில்லை யெனின், இப்பார் அன்றே அழியும் என்னும் துணிபுடையவன் இம்மன்னன். அதனால்தான் தன் பாடலில் "தமக்கென முயலாத வரும் பிறர்க்கெனவே வலிய முயற்சிசெய்து வாழ் கின்றவரும் ஆகிய சான்றோர் உளராதலின் இவ் வுலகம் உண்டு" என்று துணிந்து தட்டின்றிப் பாட்டொன்றினால் இனிதாகவும் எளிதாகவும் தெளிவாகவும் உலகிற்குக் கூறுகின்றான். அப் பாட்டு வருமாறு:

"உண்டா லம்மவிவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே, முனிவிலர்
துஞ்சும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே."

திணை—பொதுவியல் துறை—பொருண்மொழிக்காஞ்சி

[இயைவதாயினும் — கிடைப்பதாயினும்; தமியர் — தனித்து; முனிவிலர்—வெறுப்புக் கொள்ளார்; துஞ்சலும்—மடிந்திருத்தலும்; அயர்விலர்—கவலை யுறுதலிலர்; அன்னமாட்சி—அப்படிப்பட்ட

சிறப்புடைய; அனையர்—அத்தன்மையர்; நோன்றாள்—வலிய முயற்சி. உண்மையான்—உளராதலால்.]

அதன் கருத்து

பெறுதற்கரிதான தேவாமிழ்தம் அப்பிறர் நலம் கருதும் பெற்றியார்க்கு எளிதில் கிட்டினும் அதனைத் தாமே தமித்து உண்ணார். பிறரை எக்காரணம் பற்றியும் வெறுக்கமாட்டார்கள். யாவரிடமும் அன்புடையவராகவே வாழ்வர். பிறர் அஞ்சும் பழிபாவச் செயல்களுக்குத் தாமும் அஞ்சுவர். அன்றியும் தமக்குரிய கடமைகளைச் செய்யச் சோம்புதலிலர். செய்து முடித்துப் பின்னரே பிறவற்றைக் கருதுவர். புகழ் கிடைப்பதாயின் தம் உயிரையும் கொடுத்து அப்புகழ் பெற முயல்வர். உலகம் முழுவதும் கிடைப்பதாயினும் மிகச் சிறிய பழிச்செயலையும் செய்யார். இப்படிப்பட்ட மாண்புடைய குணங்களைப் பெற்றுச் சிறந்த முயற்சியுடையவராகித் தமக்கென வாழாது பிறருக்காகவே வாழ்கின்ற பெரியோர்களாற்றான் இவ்வுலகம் நிலை பெற்றிருக்கின்றது. மேற்கூறிய நற்பண்புகள் அனைத்தும் வாய்க்கப்பெற்ற சான்றோர் ஒருவரைக் காண்டல் அரிதினும் அரிதே. அதுவும் இக் காலத்தவரிடம் காண்டல் முயற்கொம்பே.

பண்டைக் காலத்தில் சேரர் மரபில் வாழ்ந்த அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் வள்ளல், அமிழ்தினும் இனியதும், அரிதின் முயன்று பெற்றதும், உண்டாரை நெடுநாள் வாழவைக்கும் ஆற்றல் உடையதுமாகிய கருநெல்லிக்கனியைத் தான் உண்டு வாழ்வதைக் காட்டிலும் ஔவையார் உண்டு, உலகில் நெடுநாள் வாழ்வாராயின் உலகிற்

குப் பெரும்பயன் விளையும் என்பதனைச் சிந்தித்து முடிவு செய்தான் அன்றோ? அவன் அதனால் பெற்றது யாது கொல்? பிறர் நலங்கருதி வாழும் பண்புடையவனாக நம்மால் போற்றப்படுவது ஒன்றோ? சங்கப்புலவர் ஔவையாரால், "நீலமணி மிடற்று ஒருவன்போல மன்னுக பெரும!" என்னும் வாழ்த்துரை பெற்றான் அல்லவா? அதனினும் பெறுதற்கரிய பேறு யாதுளது? இந் நிகழ்ச்சி, "இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் இனி தெனத் தமியர் உண்டலு மிலர்" என்றதற்குச் சான்று பகர்வது காண்க.

இவ்வேந்தன் புறப்பொருள் அமையப்பாடும் பெற்றியோனாக விளங்கியதோடன்றி அகப்பொருள் அமையப்பாடும் ஆற்றல் உடையவனாகவும் விளங்கினான். இவன் பாடியனவாக நற்றிணையில் இரண்டு செய்யுட்கள் காணப்படுகின்றன (பாடல்கள் 55, 56). இவற்றுள் ஒன்று, குறிஞ்சித் திணைக்குரியது. மற்றது பாலைத் திணைக்குரியது. நற்றிணையில் காணப்படும் 55-ஆம் செய்யுளை இவ்வழுதி, தோழி கூற்றாகப் பாடியுள்ளான். பாட்டின் கருத்து:

தலைவன் தலைமகளை வரைந்துகொள்ளற் பொருட்டுப் பொருள் தேடிவரப் புறப்பட்டான். சென்றவன் நீண்ட நாட்களாகியும் திரும்பவில்லை. அவன் பொருள்தேடி விரைந்துவந்து, வரைந்து கொள்வதாகச் சொன்ன பருவமும் வந்து கழியும் நிலையிலுள்ளது. தலைமகள் பிரிவுத் துன்பத்தைத் தாங்காது வருந்திக் கொண்டிருக்கிறாள். தோழி, தலைமகளுக்குத் தன் ஆற்றலை எல்லாம் பயன்படுத்தி

ஆற்றுவித்துக் கொண்டிருக்கின்றாள். இந் நிலையில், வரை பொருட்டாகச் சென்ற தலைமகன் திரும்பி வருகின்றான். அவனை விரைவில் வரைந்துகொள்ளச் செய்யவேண்டும் என்று விரும்பிய தோழி, அவன் தலைமகளைப் பிரிந்திருந்தபோது நிகழ்ந்ததாக ஒரு செய்தியைக் கூறித்தான் தலைவியை ஆற்றுவித்திருந்த அருமையைத் தெளிவாகக் கூறுகின்றாள். அச்செய்யுள் வருமாறு:

"ஓங்குமலை நாட ஒழிகநின் வாய்மை
காம்புதலை மணந்த கல்லதர்ச் சிறுநெறி
உறுபகை பேணாது இரவின் வந்திவள்
பொறிகிளர் ஆகம் புல்லத்தோள் சேர்பு
அறுகாற் பறவை யளவில மொய்த்தலின்
கண்கோ ளாக நோக்கிப் பண்டும்
இனையை யோவென வினவினள் யாயே.
அதனெதிர் சொல்லா ளாகி அல்லாந்து
என்முக நோக்கி யோளே அன்னாய்
யாங்குணர்ந் துய்குவள் கொல்என மடுத்த
சாந்த ஞெகிழி காட்டி
ஈங்கா யினவால் என்றிசின் யானே."

[வாய்மை—உறுதிமொழி; காம்பு தலைமணந்த—மூங்கில் நிறைந்த; கல்லதர்ச் சிறுநெறி—கற்கள் நிறைந்த வழி; உறுபகை—மிக்க பகை; பேணாது— போற்றாது; பொறிகிளர்—அழகு அல்லது ஒளி விளங்கும்; அறுகாற் பறவை—வண்டினம்; கோளாக—கருவியாக; இனையையோ—இத்தன்மையையோ; அல்லாந்து—வருந்தி; ஞெகிழி—கொள்ளிக்கட்டை.]

## பாட்டின் நயம்

தலைமகன் தலைவியின் நட்பை விரும்பி, உயிர்க்கு இறுதியுண்டாகும் அரியவழி யென்றும் பாராது, நள்ளிரவில் பல நாட்கள் வந்து, பயின்று சென்றவன் என்பதை, இவர், மூங்கில்கள் நெருங்

கிய கற்பாறை நெறியாகிய சிறிய வழியில் வேங்கை முதலிய மிகக் கொடிய விலங்குகளின் பகைமை யையும் பொருட்படுத்தாது, வந்து சென்றவன் என்று கூறுகின்ருர். அத்தலைமகன் கூட்டுறவால் தலைமகள் பெற்ற மாற்றத்தைக் கண்டுகொண்ட செவிலி, "நீ இதன் முன்னும் இப்படி வண்டுக ளால் மொய்க்கப்பெற்ற தோளினை யுடையையோ?" என்று வினவினளாம். அதற்கு அவள் எதிர் மொழி சொல்ல அறியாதவளாய் தோழியின் முகத்தை நோக்கி நின்ருளாம். அக்குறிப்புணர்ந்த தோழி, இவள் எப்படி ஆராய்ந்து மறைத்துக் கூறி உய்வாள் என்று எண்ணித் தன் அன்னையை (செவிலி) நோக்கி அடுப்பிலிட்ட சந்தன விறகின் கொள்ளியை எடுத்துக்காட்டி, "அன்னய் இவ்விற கினை அடுப்பிலிடுதலும் இதிலுள்ள சுரும்புகள் இவளுடைய தோளில் மொய்க்கின்றன காண்" என மறைத்துக் கூறினளாம். இங்ஙனம் எத்துணை நாள் நீ வரைந்து கொள்ளுதல் காரணமாகப் பொய்கூறித் தலைமகளை உய்விப்பது? என்று தலை மகனைத் தோழி வினவுவதாகப் பாடியுள்ளான் இவ்வழுதி.

### செய்யுள் கருத்து

விரைவில் வரைந்துகொள்ளும்படித் தூண்டு தலே இவ்வாறு தோழி கூறுவதன் கருத்து. இவ்வாறு உண்மையில் நடந்தது கொல்? அன்று அன்று. வேந்தர் இளம்பெருவழுதி இவ்வாறு படைத்து மொழிந்ததேயாகும் இது. இப்பாடலின் கருத்து படிப்பவர்க்கு எத்தகைய இன்பஞ் செய் கின்றது! தோழியின் பேராற்றலும் செவிலியின்

நுட்பமான கேள்விகேட்குந் திறனும் பாராட்டத் தக்கன வல்லவோ? இவை மன்னனின் பெரும் புலமையையும் நுண்மாண் நுழை புலத்தையும் தெளிவாக்கு வனவாம்.

இனி, இம்மன்னன் பாடிய பாலைத் திணைக்குரிய செய்யுள், தலைவி கூற்ருக அமைந்துள்ளது. அதாவது தலைமகன் வரைந்து கொள்ளுதற் பொருட்டு, பொருள் தேடப் பிரிந்து சென்றுள் ளான். அவ்வமயம் தோழி, தலைமகளை ஆற்று விக்கின்ருள். அது தோழியின் கடமையன்ருே? தான், பிரிவுவருத்தத்தால் மெலியாவண்ணம் ஆற்று விக்கின்ற தோழியை நோக்கிக் கூறுவதாக இயற்றப் பட்டது இவ்வேந்தன் பாடிய செய்யுள். அச் செய்யுள் வருமாறு:

"குறுநிலைக் குரவின் சிறுநனை நறுவீ
வண்டுதரு நாற்றம் வளிகலந் தீயக்
கண்களி பெறூஉங் கவின்பெறு காலை
யெல்வளை ஞெகிழ்த்தோர்க் கல்லலு றீஇயர்
சென்ற நெஞ்சஞ் செய்வினைக் குசாவா
யொருங்குவர னசையொடு வருந்துங்கொல்லோ
அருளான் ஆதலின் அழிந்திவண் வந்து
தொன்னலன் இழந்த பொன்னிற நோக்கி
யேதி லாட்டி இவளெனப்
போயின்று கொல்லோ நோய்தலை மணந்தே."

(நற்றிணை 56)

[குறுநிலைக் குரவு—குறிதாக வளரும் குராமரம்; சிறுநனை—சிறிய அரும்புகள்; நறுவீ—முதிர்ந்த நறிய மலர்; வண்டுதரு நாற்றம்—வண்டு மொய்த்தலால் உண்டான நன்மணம்; வளி—காற்று; களி பெறும்—இன்புறும்; எல்வளை—ஒளி பொருந்திய வளையல்கள். அல்லல் உறீஇயர்—துன்புறுத்துவதற்காக; உசாவா—சூழ்ச்சி சொல்லி; ஒருங்குவரல் நசையொடு—உடன் வரும் விருப்போடு; அழிந்து—வருந்தி; நோய் தலை மணந்து—துன்பத்தைத் தாங்கிக் கொண்டு.]

மேற் சொல்லப்பட்ட பாடலில், அன்பால் பிணிக்கப்பட்ட வாழ்க்கைத் துணைவர் இருவருள், தலைமகள், தன்னைத் தலைமகன் பிரிந்து சென்ற காலத்தில் எவ்வாறு அமைதியற்றிருப்பாள் என்பதையும், அவள் உள்ளம் எவற்றையெல்லாம் எண்ணும் என்பதையும் நாம் நன்கறியலாம். தலைவி தோழியை நோக்கி, "யான் ஆற்றுவேனாயினும் என்னுள்ளம் என் பாலின்றி, வரைபொருட்குப் பிரிந்த அவன்பாற் போகியது. அது தான், இனி அவருடன் வருகின்றதோ அன்றி அவர் அருளாமையால் மீண்டு வந்து, பிரிவுத் துன்பத்தால் முழுதும் வேறுபட்டுள்ள என் உடம்பை நோக்கி உருவம் மாறுபட்டுள்ள இவள் அயலிலாட்டியே என நினைந்து மீண்டும் போயொழிந்ததோ? என்று கூறுகின்றாள். தலைவியின் உள்ள நிலை எவ்வாறுள்ளது காண்மின். ஈண்டு வள்ளுவர் கூறும் குறளையும் ஒப்பு நோக்கி மகிழலாம்.

"அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீஎமக் காகா தது."

(நெஞ்சொடு புலத்தல்—குறள்)

## செய்யுள் இனிமை

தலைவனுடன் கூடி இயற்கை காட்சிகளைக் கண்டு இன்புறவேண்டிய வேனிற் காலத்தே தலைவன் பிரிந்து சென்றான் என்பதை, "குறிதாக வளரும் இயல்புடைய குராமரத்தின் சிறிய அரும்புகள் முதிர்ந்த நறிய மலரில், வண்டு விழுதலான் எழுந்த மணத்தைத் தென்றற் காற்று புகுந்து, சுமந்து, கலந்து வீச, கண்கள் அவற்றின் அழகை நோக்கி மகிழ்வடைவதற்கேற்ற பருவம் வந்தது.

ஆனால் தலைமகன் ஒளி பொருந்திய வளை நெகிழ் வித்தார்'' என்பதை,

''குறுநிலைக் குரவின் * * * * ஞெகிழ்த்தோர்''

என்னும் அழகிய அடிகளில் அமைந்த இன்சொற் களால் கூறுகின்றார். மற்று, தலைமகள் நெஞ்சம் தலைமகனிடம் சென்று வாளா இராதாம். ஆண்டு அவன் செய்யும் வினைக்குச் சூழ்ச்சி சொல்லும் துணையாயிருந்து அவ்வினையை முற்றுவிக்குமாம். இவ்வளவும் செய்த பின்னர் தலைமகளை மீண்டும் காணத்திரும்புமாம் அவள் உள்ளம். அப்போது உள்ள தலைமகள் நிலையைப்பற்றி ஆசிரியர், அவள் பிரிவு காரணமாக முன் இயற்கையில் அமைந்து விளங்கிய நலனிழந்து காணப்படுகிறாள் எனவும், பொன்னிறப் பசலையால் அவள் உருவம் முழு வதும் மூடப்பட்டிருக்கிறதெனவும் கூற நினைத்து இக்கருத்துக்களை, ''தொன்னலன் இழந்த என் பொன்னிற நோக்கி, ஏதிலாட்டி இவளெனப் போயின்று கொல்லோ நோய்தலை மணந்தே'' என்ற இனிய அழகிய சொற்களால் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றார்.

### மன்னன் புலமைச் சிறப்பு

இச்செய்யுளில் தலைமகளாகத் தன்னை எண் ணிக்கொண்டு, தலைமகனைப் பிரிந்துள்ளபோது தலைவியின் உள்ள நிலையை நன்குணர்ந்த வழுதி கூறியதும், மகளிர் உடல்மெலிவு காரணத்தால் வளைகள் தாமாக நெகிழ்ந்து வீழ்வதையும், உடற் பொலிவுகுன்றி பொன்னிறப் பசலையூர்ந்து தன் னெஞ்சம் தன்னை ஐயுறும்படி—இவள் நம் தலைவி யல்லள்; அயலிலாட்டிபோலும்—உருவே மாறி

யிருக்கின்றது எனக் கூறுவதும்கொண்டு வழுதியை "இளம்பெருவழுதி" எனக் கூறலாம் அன்றோ? இளமைப் பருவத்திலேயே இத்தகைய கவினார்ந்த செய்யுள் இயற்றத்தக்க பெரும்புலமையைப் பெற்ற மன்னனின் கலை யுள்ளத்தை எங்ஙனம் பாராட்டு வது?

முடிவுரை

பேரறிவாளனாகிய இம்மன்னன் தன் இளமைப் பருவத்திலேயே கடலுள் கலங்கவிழ்ந்து மூழ்கி இறந்தானாகல்வேண்டும். அங்ஙனம் இறந்து படாது பல்லாண்டுகள் வாழ்ந்திருப்பின் தன் பேரறி வுடைமையால் உலகத்தவர் இன்புற, சிறப்பாகத் தமிழர் பேரின்பம் அடைந்து, நல்வாழ்வு வாழப் பல பாடல்கள் பாடியிருக்கக் கூடும். அவற்றைப் படித்து நாம் பயன் பெற்றிருக்கலாம். பொறாமை யால் இவ்வேந்தனை—கலைச் செல்வனைக்—கடல் விழுங்கியது நெடிது நினைந்து இரங்கத் தக்கது.

# கிள்ளிவளவன்*

## சோழநாட்டின் செழுமை

சேர சோழ பாண்டிய நாடுகளாகிய தமிழ் நாட்டின் முப்பிரிவுகளும் தமக்கே உரிய தனிச்சிறப்புடையன. எனினும் தலையாய சிறப்பு சோழ நாட்டிற்கேயுண்டு. அக்காரணம் பற்றியே சோழ நாடு, "வளநாடு" எனச் சிறப்பிக்கப்படுகிறது. அன்றியும் நாடுகள் மூன்றனுள்ளும் சோழநாடு, நடு நாயகமாக வைத்தோதப்படுகிறது. இந்நாடு தொண்டை நாடு என்னும் பிரிவைத் தன்னகத்தே கொண்டது என்று முன்பு கூறப்பட்டது. இப்பகுதியும் தெளிந்த நீர் பாயப்பெறும் வளப்பமுடைய நன்செய் நிலங்களால் நிறைந்து விளங்குவது. ஆண்டு வாழ்கின்ற மக்கள் பலரும் சான்றோர் என அழைக்கப்பெறும் பெரு மதிப்புக்குரியராவர். இச்சோழநாடு, சங்கப் புலவரும் தெய்வக் கவிஞருமாகிய ஔவையார் போன்ற பெரும் புலவர்களால் புகழ்ந்து பாடப்பட்ட பெருமையையுடையது. எனவே அந்நாட்டின் வளத்தை வரை யறுத்துக்கூற இயலுங்கொல்?

## கிள்ளி வளவனின் முன்னோர்

இவ்வளமிக்க நாட்டை மணிமுடி கவித்துச் சோழ அரசர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்களுள் ஒப்பற்ற வரலாற்றுப் புகழ் உடையவர்கள் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி, கரிகாற்

---

* குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

சோழன் என்பவர் ஆவர். இவ்வேந்தர்கள் செயற்கரிய செயல்களைச் செய்தவர்கள். கரிகால் மன்னன் "பெருவளத்தான்" எனச் சிறப்பிக்கப்படுபவன் ஆவான். இம்மன்னன் இமயம் வரை சென்று வெற்றிக்கொடி நாட்டித் திரும்பியவன்; காவிரியாற்றிற்குக் கரையமைத்துப் புகழ் எய்தியவன். இத்தகைய பெருமன்னர் ஆண்ட காலத்தில் தமிழ் நாட்டில் ஏனைய பகுதிகளை ஆண்ட அரசர்கள் தத்தமக்குரிய நாடுகளைச் சீரிய முறையில் ஆள்வதில் மட்டுமே நாட்டம் செலுத்தினர். இம்மன்னர்கள் மரபில் தோன்றியவர்களுள் ஒருவன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்னும் அரசன்.

## கிள்ளியின் வீரமும் கோடையும்

இவன் மரபில் வந்த பலருக்கும் கிள்ளி என்ற பெயர் உண்மைபற்றி அவர்களினின்றும் வேறு பிரித்து அறிவதற்காகவும் இவ்வேந்தன் குளமுற்றம் என்னும் ஊரில் துஞ்சிய காரணத்தாலும் கிள்ளி வளவன் என்ற தன் இயற்பெயரோடு 'குளமுற்றத் துத்துஞ்சிய' என்னும் அடை மொழியையும் சேர்த்து வழங்கப்பட்டான். இவ்வேந்தன் ஒரு கொடைவள்ளல். இவன் பெருவீரன் என்பது இவன் செய்த போர்ச் செயல்களால் அறியப்படுகிறது. இவன் புலவர் பாடும் புகழுடையோனாக விளங்கியவன். அன்றியும் இவன் பாடல் இயற்றும் புலமைபெற்றுப் புகழொடு விளங்கியவன் என்பதும் புறநானூற்றில் காணப்படும் இவன் பாடல்களால் புலப்படுகிறது. இம்மன்னனிடம் புலவர்கள் கொண்டிருந்த பெருமதிப்பு இவன்

இறந்தபின்னர் பிரிவாற்ருது, அவர்கள் பாடிய கையறு நிலைப்பாடல்களால் வெளிப்படுகின்றது. இவற்றின் விரிவை இனிக் காண்போம்.

"ஊர் எனப்படுவது உறையூர்" என்று சான்ருேர்களால் சிறப்பிக்கப்பெறும் பெருமையினை யுடையது உறையூர். அவ்வூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தினன் இக்கிள்ளி வளவன். இம்மன்னனைப் பாடிய புலவர்களுள் கோவூர் கிழார், மாருேக்கத்து நப்பசலையார் என்பவர் இருவரும் இவனைப் 'புள்ளுறு புன்கண் தீர்த்தோன்' வழி வந்தவன் எனப் புகழ்கின்றனர். புரு ஒன்றின் பொருட்டு, தன் உயிரையே கொடுக்கத் துணிந்த சிபி என்னும் சோழ மன்னனின் மரபில் வந்தவன் என்பதனல் இவ்வேந்தனும் அத்தகைய நற்பண்புகளுக்கு உறைவிடமானவன் என்பது அறியப்படும். திருவள்ளுவர் அருளிய,

> "அன்பிலா ரெல்லாம் தமக்குரியர் அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு"

என்னும் குறட்பாவிற்கு எடுத்துக்காட்டாகத் தன் வாழ்க்கையை நடத்திக்காட்டிய பெருமையை யுடைய தன் முன்னேனின் புகழை மிகுவித்தல ன்றே அவன் வழிவந்த மன்னர்கடன். ஆதலால் இவ்வேந்தன் எவ்வாறு தன் முன்னேர் புகழை வளர்த்தான் என்பதை இனி ஆராய்வோம்.

### கிள்ளியும் காரியும்

வரையாத ஈகையால் அழியாப் புகழ்படைத்த திருமுடிக்காரி என்பவன் ஒருகால் கிள்ளி வளவனுக்குப் பகையாய் அமைந்தான். இவன் நெடுங்

கிள்ளி என்பவனுக்குத் துணையாகச் சென்று உதவி செய்தான். அவ்வுதவி கண்டு பொருமை கொண்டான் கிள்ளி வளவன். மூவேந்தர்கள் தமக்குள்ளே போர் செய்ய நேர்ந்தபோது ஒப்பற்ற வீரனுகிய காரி, தளர்ந்தவர் பக்கம் சென்று உதவும் இயல்பினன். பின்னர் தான் உதவியதன் பொருட்டு அவர்கள் தரும் பெரும் பொருள் அனைத்தையும் பரிசிலர்க்கு வழங்கும் வள்ளன்மை யுடையவன். காரியின் இவ்வியல்பினை அறிந்தோ அறியாமலோ தன் பகைவனுக்கு உதவி செய்தான் என்ற ஒரே காரணத்தால் கிள்ளிவளவன் அவன்மீது அடங்காச் சீற்றம் கொண்டான்; அவன் மக்கள் இருவரையும் எப்படியோ சிறைப்பிடித்தான். ஆருச் சினத்தால் ஆராயாது அவ்விளஞ் சிருரை யானைக் காலால் இடறுவிக்கத் துணிந்தான். இதனைக் கேள்வியுற்ற அருள்வடிவினரான கோவூர்கிழார் பதை பதைத்து இரங்கி, விரைந்துவந்து, அவன் செற்றம் தணியவும் காரியின் மக்கள் உயிர்மீளவும் ஏற்றவகையில் பாடல் ஒன்றுபாடி அவன் அக் கொடுஞ் செயலைக் கைவிடுமாறு செய்தார்.

### கோவூர்கிழாரின் நற்பணி

"நீ ஒரு புருவின் அல்லல் அன்றியும் பிறவுயிர்களுக்குற்ற துன்பத்தையும் தீர்த்தற்கு உயிர்க் கொடை பூண்ட சோழன் மரபில் உள்ளாய். இவர் தம் அறிவால் உழுதுண்ணும் கற்ருேரது (புலவர் களின்) வறுமைத் துன்பத்திற்கஞ்சி தன் பொருளைப் பகுத்துண்ணும் அருளுடையானது (காரி) மரபில் உள்ளார். இவர்கள் இப்போது களிற்றைக் கண்ட வியப்பால் முன்பு வெருவி யழுத அழுகையை

மறந்திருக்கின்ற சிறு பிராயத்தினர். இம்மன்ற மாகிய இடத்தை வெகுண்டு நோக்கி, முன்பு அறியாத புதியதோர் வருத்தத்தை உடையவர். இதனைக்கேட்டனையாயின் நீ விரும்பியதைச் செய்க" என்பது அவர் கூறிய பாடலின் கருத்து. இதனைச் செவி மடுத்த கிள்ளிவளவன் தன் குற்றத்திற்கு நாணி, அப்பிள்ளைகளைக் கொல்லாது விடுத்தான். வளவன் முதலிற் செய்யத் துணிந்த செயலைக் கண்டு அவனை முற்றும் வெறுக்கலாம். ஆயினும் பின்னர் சான்றோர் சொற்கேட்டு அதனைச் செய்யா தொழிந்தமைக்காக அவனைப் பாராட்டாமலிருக்க முடியுமோ?

## கிள்ளி ஆட்சியில் தமிழகத்தின் நிலை

கிள்ளிவளவன் ஆண்ட காலத்தில் சோழநாடு தை மாதத்துக் குளிர்ந்த பொய்கைபோல, கொள்ளக் கொள்ளக் குறையாத சோற்றையுடைய அகன்ற நகரங்களால் சிறந்து விளங்கிற்று. ஆங்கெல்லாம் அடுநெருப்பை யல்லது சுடு நெருப்பை யறியார் மக்கள். உயிரை உடலொடு பொருந்த வைப்பதற் கேற்ற மருந்தாகிய சோற்றையும் தண்ணீரையும் பெற்று, மிக்க செழிப்புடன் விளங்கிய காரணத்தால், இந்நாட்டை ஆண்ட சோழனை நாடி, பழுமரம் தேரும் பறவையினம்போல இரவலர்களும் பாணர், பாடினியர், விறலியர் முதலியவர்களும் நெடிய வழியின் கொடுமையையும் மறந்து சுரம்பல கடந்து வருவார்கள். இவனை நாடிச் செல்பவர்,

> "நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
> பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
> வறிது பெயர்குநர் அல்லர்."

ஆதலால், இவ்வாறு வருகின்ற பரிசிலர்களைக் கிள்ளி வளவன் ஒன்றனையும் மறைத்தலில்லா உள்ளத்தோடு நல்ல இனிய வார்த்தைகளைப் பலகாலுங்கூறி, பெரிய கட்டியாகிய சோற்றுத் திரளையைக்கொண்டு உண்பிப்பான். அதன்பின் அவர்கட்கு வேண்டிய செல்வம் அனைத்தையும் நல்கி வழியனுப்புவான். இவ்வாறு விருந்தோம்பும் வேந்தனைப் பரிசிலர், 'பெரிய முகில் சொரிந்த நுண்ணிய பல துளியினும் பலகாலம் வாழ்க' என வாழ்த்திச் செல்வார்கள்.

## புலவர் புகழுரை

இம்மன்னன் செய்த வண்மையைப் பற்றிப் புலவர் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் யாது கூறுகின்றனர் எனப் பார்ப்போம். மன்னன் இன்பமாகத் தங்கியிருக்கும் பாசறையின் கண், மன்னனை விடியற் காலத்தில் துயிலெழுப்புவராம் வீரர்கள். எவ்வாறு? வெள்ளியாகிய விண்மீன் அடிவானத்தில் இருந்து படிப்படியாக மேலே எழுகின்றது; பலவகைப் பறவைகளும் மரங்களில் கட்டியிருக்கும் தம்முடைய கூடுகளில் குரல் எழுப்பத் தொடங்கின. பொய்கையிலுள்ள நீர்ப் பூக்கள் மலரத் தொடங்கி விட்டன; தண்ணிலவு தந்து உலகை மகிழ்வித்த மதியும் ஞாயிற்றின் வரவால் தன் ஒளி மழுங்க ஆரம்பித்துவிட்டது என அறிவிப்பனபோல இரங்கு குரல் முரசுடன் வலம்புரிச் சங்குகொண்டு ஆர்த்தும், இவ்வொலிகளைக் கேட்பதின் பொருட்டுத் துயில் எழுக என அழகிய கண்களையுடைய இனிய முரசினை இயக்கியும் எழுப்புவராம். அச் சமயத்திலும் பரிசிலர் வருவர். வந்தவர்களுக்கு நெய்யிட்டுத் தாளிப்புச் செய்த ஊனினையும்

அழகிய கலங்களில் மணம் வீசும் தேறலையும் தந்து உண்ணச் செய்து, பின்னர் அவர்களுக்கும் பாம்புத்தோல் போலும் சிறந்த அழகிய மெல்லிய பூவேலைப் பாடமைந்த ஆடைகளை வழங்குவான்.

புலவர் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் மாரி யன்ன வண்மையிற் சொரிந்து பரிசிலாளர்களின் வேனில் அன்ன வெப்பு (வறுமை) நீங்க, அருங் கலன் வழங்குவான் என்கின்றார். இத்துடன் அவன் மனம் அமைதி கொள்வதில்லையாம். கிடைத்தற்கரிய பொன்னணிகள் பலவும் நல்குவா னும். இப்படிப்பட்ட வண்மையுடைய மன்னனைப் பெற்றிருக்கும் நாங்கள், "ஞாயிறு தென்திசையில் தோன்றினும் சிறிதும் அஞ்சோம்" என்று அப் புலவர் மேலும் கூறுகின்றார். மன்னன் வழங்கும் ஆடைகள் அன்று மலர்ந்த பகன்றைப் புதுமலர் போன்ற அழகும் மென்மையும் உடையன என நல்லிறையனார் என்ற புலவர் கூறுகின்றார். வந்தவர், வெம்மை உணவை உண்பதால் உண்டாகும் வியர்வையல்லாமல் செய்தொழிலால் உண்டான வியர்வை அறியாவாறு, புகழ் உண்டாக ஈந்தவன் எந்தை வளவன் என்று கோவூர்கிழார் பாடுகிறார்.

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"

என்ற குறளின்படி நம் கிள்ளிவளவன் பகை மன்னரை அறநெறி நிறுத்துதற் பொருட்டு அவர் நாட்டின்மீது படையெடுத்துச் செல்லவேண்டிய இன்றியமையாமையும் நேர்வதுண்டு. அக்காலத்து, அவன் வெகுண்டெழுந்து செல்லும் செலவைப் புலவர் ஒருவர், "காற்றோடு எரி நிகழ்ந்தன்ன செலவு" எனக் கூறுகின்றார். இவன் சினமிகுந்து

படை எடுத்து வருதலைப் பகைவர் நாட்டு வாழ்வோர், நனவின்கண் பல தீ நிமித்தங்களையும் கனவின்கண் பல தீ நிமித்தங்களையும் கண்டு அஞ்சி மனக்கலக்கம் எய்துகின்றனர். அக்கலக்கத்தைக் கொள்ளும் வீரர்கள் தம் புதல்வர்களின் அழகிய கண்களில் முத்தந்தந்து தம்மனைவியர் அக்கலக்கத்தை அறியாவண்ணம் மறைக்கின்றனர். இவ்வாறு நின் பகைவர் நாடு பெருங்கலக் குறுகின்றது என்று கூறுகின்றார் கோவூர்கிழார். ஞாட்பினுள் நண்ணாரும் உட்கும் பீடுடைய இம்மன்னனுக்கு வெற்றியன்றி விளைவது வேறு யாதுளது? தோற்ற மன்னர்தம் முடிகள் இவன் அடியில்படப் பணிய, அவர்களின் பொன் முடிகளைக்கொண்டு வீரக்கழல் செய்து அழகுபெற அணிபவன் இவ் வேந்தன். அவன் அப்பகைவர் நாட்டில் தங்கியிருப்பினும் அந்நாடு அவனுக்கு உரிமையுடையதே என எண்ணிப் புலவர்கள் பரிசில் பெற அவனை நாடி வருவர். அவன் திறைப்பொருளாகப் பெறும் பொருளனைத்தும் இரவலர்க்கே உரியதாக வழங்கும் இயல்புடையவன் ஆதலால் இவன் படை எடுத்து வருதலையறிந்து பகையரசர் தம் கோட்டைக்குள் சென்று அடைத்துக் கொள்ளுதலும் உண்டு.

சேர நாட்டின் தலைநகரம் வஞ்சி. இது கருவூர் எனவும் வழங்கப்படும். அந்நகரை ஒருமுறை கிள்ளிவளவன் முற்றுகை செய்திருந்தான். நாள் பல கழிந்தும் அஞ்சி அடைத்துக்கிடக்கும் வேந்தன் வெளியில் வரவில்லை. ஆதலால் இக்கிள்ளிவளவன் கோட்டையுள் கிடக்கும் வேந்தன் காதில் எட்டுதற்பொருட்டு முரசதிர்த்தான். மற்றும் அடை

மதிலில் உள்ள மன்னனின் காவல் மரத்தை தடியத் தொடங்கினன். அதனைக் கண்ட ஆலத்தூர்கிழார் என்ற புலவர், அஞ்சிப் பதுங்கிக் கிடக்கும் வேந்தன் நாட்டில் நீ முரசுமுழக்கிப் போர்செய்யத் துணிந்திருத்தல் நாணுத்தக உடைத்தே எனக்கூறி அவனைப் புகழ்வதன் மூலம் அவன் சினத்தைத் தணியச் செய்தார்.

ஆவூர் மூலங்கிழார் என்ற புலவர் இவன் சினத்தையும் அருள் செய்தலையும், "நீ முனிந்து பார்க்குமிடம் தீப்பரக்க, நீ நயந்து நோக்கும் பக்கம் பொன்பொலிய, செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும் வெண்திங்களுள் வெயில் வேண்டினும் வேண்டியது விளைக்கும் ஆற்றல் உடையை. கற்பகக் காவுடைய விண்ணுலகத்தவர் ஆங்குத் தாம் செய்த நல்வினைக்கேற்ற அளவில் இன்பத்தைப் பெறுதலின்றி, செல்வம் உடையோர் வறியோர்க்கு வழங்குதலோ, வறியோர் செல்வம் உடையோர்பால் சென்று இரத்தலோ இயலுவதன்மையின், அவ்வாழ்வு துன்பந்தருவது என்றெண்ணி, அவ்விடத்துப் பெறும் இன்பத்தையும் இவ்விடத்தே பெறக் கூடும் என்னும் துணிபுடையவராய் நின்னாட்டைக் கருதி வருகின்றனர்" எனப் புகழ்கின்றார்.

## கிள்ளியும் ஆலத்தூர் கிழாரும்

ஒருகால் ஆலத்தூர்கிழார் என்னும் சான்றோர் கிள்ளியின் தலைநகராய உறையூருக்குச் சென்று மன்னனைக்காண விழைந்தார்; அரண்மனைக்குச் சென்றார். வாயிற் காவலர் புறத்தோற்றத்தாலேயே இவரைப் புலவர்களுள் ஒருவர் என்றுணர்ந்து, தடையின்றி உள்ளேபோக விடுத்தனர். புலவர்

பெருந்தகையின் வரவுகண்ட வேந்தன் இன்முகங் காட்டி, வரவேற்று, இருக்கை தந்து, இன்சொற் கூறி உபசரித்தான். அம்மன்னனிடத்தில் புலவர் சின்னுள் தங்கி, அளவளாவி மகிழ்ந்தார். இடை இடையே மன்னனின் படைச் சிறப்பையும், போர்க்குச் சென்று மாடி வீட்டில் தங்கியிருக்கும் இருப்பையும், அவன் வேல்படையின் மாண்பையும் கண்டு மகிழ்ந்தார். பின்னர் மன்னனிடம் விடைபெற்றுப் புறப்பட்டார். வேந்தனும் அவர்க்கு மிக்க பொருள்நல்கி விடையளித்தான். பரிசு பல பெற்றுப் பெருமிதத்தோடு திரும்பும் புலவர், வழியில் பாணர் கூட்டத் தலைவன் ஒருவனைச் சந்தித்தார். இவரைக் கண்ட பாணன், எந்த நாட்டு மன்னனோ இவன் என ஐயுறும்படி விளங்கினர். ஐயமுற்ற அப்பாணர் தலைவனுக்குத் தன்னை உணர்த்தும் வகையில் புலவர், தனக்கு அச்சிறப்புக்களைச் செய்தவன் கிள்ளிவளவன் என்னும் புரவலன் எனக்கூறி, அவனை ஆற்றுப் படுத்தினர். இக்கருத்துக்களைக் கொண்ட அவர் பாடலில், "கிள்ளி வளவர் படர்குவையாயின் உறுதியாக நீ பொற்றாமரைப் பூவைச் சூடுவாய்" என்று கூறி அவன் வள்ளன்மையைச் சிறப்பிக்கின்றார்.

## வெள்ளைக்குடி நாகனாரும் கிள்ளியும்

காவிரி புரக்கும் நாடு கிழவோனாகிய இவ் வேந்தனிடம், "வெள்ளைக்குடி" என்னும் ஊரில் வாழ்ந்துவந்த நாகனார் என்னும் புலவர் செல்ல நேர்ந்தது. ஏனெனில் அக்காலத்தில் அவ்வூரிலும் சுற்றுப் பக்கங்களிலும் நெடுநாட்களாக மழை

யின்மையால், வற்கடம் தன்னுட்சி செய்துகொண் டிருந்தது. மக்கள் குடிக்கவும் நீரின்றி வாடினர். கன்று காலிகள், நீரிருக்கும் இடந்தேடி மந்தை மந்தையாக ஓட்டிக்கொண்டு போகப்பட்டன. இந்நிலையில் விளைவு எங்ஙனம் நிகழும்!

> "விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
> பசும்புற் றலைகாண் பரிது"

என்னும் பொய்யாமொழியாரின் வாக்கு மெய்யா யிற்று. குடிகள் எங்ஙனம் அரசிறை இறுப்பர். அரசியலாட்கள் அடிக்கடி வரிகேட்கத் தொடங் கினர். மக்களின் நிலையுணர்ந்த புலவர் நாகனார், அவர்கள் அனைவரையும் அழைத்து, அரசனைக் கண்டு நாட்டின் நிலைமையை எடுத்துக்கூற விழை யும் தன் எண்ணத்தை வெளியிட்டார். குடிமக்கள் அக்கருத்தைப் போற்றி மகிழ்ந்து பாராட்டினர். புறப்பட்டார் புலவர்; அரசனிடம் தடையின்றிச் சென்றார். மன்னன் புலவரை வரவேற்று இன் சொல் வழங்கினன். வந்த களைப்பு நீங்க உண்டு இளைப்பாறினார் புலவர். பின்னர் அரசனிடம் அமைதியாக, அவனை நாடிவந்ததன் நோக்கத்தைக் கூறி, உழவுத்தொழிலின் சிறப்பையும் உழவரை அரசர் காக்கவேண்டிய கடமையையும் உணர்த்தி னார். மற்றும் மக்கள் செலுத்தவேண்டிய செய்க் கடனைச் செலுத்த இயலாதிருக்கின்ற நிலையையும் அதற்குரிய காரணத்தையும் குறிப்பாக உணர்த்திக் குடிகள் செலுத்தவேண்டிய செய்க்கடனைத் தள்ளி வீடுபெற்றுச் சென்றார். அவர் கூறிய உரைகள் வருமாறு:

## வேள்ளைக்குடி நாகனர் அறிவுரை

"முரசு முழங்கு தானையுடைய தண்டமிழ்க் கிழவர் மூவருள்ளும் அரசெனப்படுவது நினதே. பெருமை பொருந்திய வேந்தே, நீ குடிகளின் காட்சிக்கு எளியவனாதல் வேண்டும். நின்வெண் கொற்றக் குடை, வெயில் மறைப்பதற்காகக் கொண்டதன்று. குடிகள் வறுமை முதலிய துன்பங் களால் நலிவுறும்போது தண்ணளியால் காத்து இன்பஞ் செய்வாய் என்பதை அறிவுறுத்தக் கொண்ட அடையாளமே இக்குடை. நினக்கு உண்டாகும் வெற்றியனைத்தும் உழவர் உழுபடை யின் பயனாகக் கிடைப்பனவே. மாரி பொய்ப் பினும் வாரி குன்றினும், இயற்கைக்கு மாறுபட்ட செயல்கள் மக்கள் வாழ்வில் தோன்றினும் இவ் வுலகம் அரசரையே பழிக்கும். இதனை நீ நன் குணர்க. ஆதலால் நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது, ஏரைப் பாதுகாப்பாராகிய குடிமக் களைப் பாதுகாப்பாயாயின் நின் அடியைப் பகை வேந்தரும் வணங்கி வாழ்வர்" என்றிவ்வாறு கூறி முடித்தார்.

இவ்வுரைகளைக் கேட்ட மன்னன் மனம் உருகித் தன் கடமைகளை உணர்ந்து, குடிமக்கள் செலுத்தவேண்டிய பழஞ் செய்க்கடனையும் செலுத்த வேண்டா என அறிவித்தான். மேலும் குடிகளுக்கு உற்ற துன்பங்களைத் துடைப்பதில் கருத்துச் செலுத்தினன். இவ்வாறு சமயம் நேர்ந் துழி இடித்துரைக்கும் உரிமையைப் புலவர் பெரு மக்களுக்கு வழங்கியிருந்தான் இம்மன்னவன். அஃதன்றியும் அவர் பொன்மொழிகளைப் போற்றி, மக்களைக் காக்கும் தன் தொழிலையும் செம்மையுறச்

செய்து, நற்புகழ்பெற்று, சீரிய பண்புடையவனாக விளங்கினான். எனவே, இவ்வேந்தன் செயல் பெரிதும் பாராட்டத் தக்கதன்றோ?

## பண்ணன் பெற்ற புலவர் புகழுரை

மக்களுக்கு நலம் செய்வதிலேயே நாட்டங் கொண்டு ஆட்சிசெய்த இப்பெரு வேந்தன் காவிரி யாற்றின் கரையில் இருந்த சிறுகுடி என்னும் சிற்றூரில் ஒரு சிறந்த நண்பனைப் பெற்றிருந்தான். அவன் பண்ணன் என்னும் நன்னராளன் ஆவன். அவனிடம் இவ்வேந்தன் நீங்காப் பற்றுடைய வனாய் விளங்கினான். சிறுகுடி கிழானாகிய பண் ணன் பேராண்மையும் கைவண்மையும் உடைய வன். புலவர்களால் பாடப் பெறும் புகழ் உடைய வன். கோவூர்கிழார், கொற்றங் கொற்றனார், மள்ள னார் போன்ற பெரும் புலவர்கள் இவனைப் பாராட் டிப் பாடியிருக்கின்றனர். “தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்” என்று கொற்றங் கொற்றனாரும், ‘வென்வேல் இலைநிறம் பெயர ஓச்சி, மாற்றார் மலை மருள் யானை மண்டமர் ஒழித்த கழற்கால் பண்ணன்’ என்று சாத்தன் கொற்றனாரும், “கைவள்ளீகைப் பண்ணன்” என்று கோவூர்கிழாரும், இவனைப் பாடிப் பாடி அழியாப் புகழ் எய்தச் செய்தனர் எனின், பண்ணனின் பெருமையை என்னென் றுரைப்பது!

பண்ணன் சிறுகுடிக்கு அண்மையில் கான் யாறும் தண்ணீர்க் கயமும் தோப்பும் இருந்தன. இவை யனைத்தும் சான்றோர் பாடல்களில் இடம் பெறுகின்றன. செவிக்கினிய இத்தகைய புகழ் உடைய பண்ணனின் தோப்பிலுள்ள நெல்லி

மரத்தின் காயைத் தின்று, கான்யாற்றுத் தண்ணீரைப் பருகி, அதனால் உண்டான இன்சுவையை நன்கறிந்த புலவர் ஒருவர், தாம் பாடிய பாட்டில் அச்சுவையை, தாய்மை நிலைபெற்ற தலைமகள் ஒருத்தி தன் குழந்தையோடு கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் தேனினும் பாலினும் இனிய தீவிய மொழிக்கு உவமை கூறுகின்றார். அப்புலவர் பெயர், மாற்றூர்கிழார் மகனார் கொற்றங் கொற்றனார் என்பது. அவர்,

> "தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
> பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப்
> புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
> நீர்குடி சுவையின் தீவிய மிழற்றி"

என்று பாடுகின்றார். இவ்வரிகளில் பண்ணன் நல்லியல்பும் அவனுக்குரிய படப்பையின் கண்ணுள்ள நெல்லிமரத்தின் காயும் அதனைத் தின்று நீர் குடிப்போர் சுவைக்கும் இன்பமும் சிறப்பிக்கப் படுகின்றன.

இவ்வாறு இன்மொழி பயிற்றும் தலைமகள் தன் மகவுடன் எப்போது கொஞ்சுகிறாள் தெரியுமா? தலைமகன் பொருள்தேடப் பிரிந்து சென்றிருக்கும் போது தன் மகவே தன் பிரிவுத் துன்பத்தை நீக்கும் மருந்தாகக்கொண்டு, மாலை நேரத்தில், மாசற்ற வானில், நீலக்கடலில் மிதந்துவரும் வெள்ளி ஓடம்போன்ற மதியை மகவுக்குக் காட்டி, "ஏ! தண்ணிலவே! பொற்றாலி (புலிப்பற்றாலி) அணிந்த என் மகவுடன் விளையாட வருவையாயின் உனக்கும் குடிக்கக் குவளையிற்பால் தருவேன்" என்றழைக்கிறாள். இக்காட்சியும் ஈண்டுத் தலைமகளின்

இனிய மொழிக்குப் புலவரால் கூறப்படும் உவமை யும் நம் மனக்கண்ணிலிருந்து என்றேனும் பிரிய முடியுமோ?

மற்றொரு புலவர், பாதிரிமலர் சூடிய விறலி ஒருத்தியைக் கண்டார். தாம் பண்ணன் படப்பை யில் கண்டு முகர்ந்த பாதிரிப்பூவின் அழகும் நறு மணமும் நினைவிற்கு வந்தன. உடனே தடை யின்றி,

"கைவள் ஈகைப் பண்ணன் சிறுகுடி
பாதிரி கமழும் ஓதி ஒண்ணுதல்
இன்னகை விறலி * * *"

என்று பாடிவிட்டார். மற்றும் ஒரு புலவர்,

"கழற்கால் பண்ணன் காவிரி வடவயின்
நிழற்கயந் தழீஇய நெடுங்கான் மாவின்
தளிரேர் ஆகம் * * *"

என்று பாடுகின்றார்.

பண்ணன் என்னும் இப்பெருந்தகை தனக் குரிய பூஞ்சோலையும் மாந்தோப்பும் நெல்லிக்காவும் ஆகிய இவற்றையெல்லாம் தனக்கெனப் பேணும் தன்மையன் அல்லன். அச்சிறுகுடிக்கண் போத ரும் பாணராயினும் புலவராயினும் மற்று யாவ ராயினும் அவனது பூம்பொய்கையிற் சென்று குளிப்பர். பூங்காவினுள் புகுந்து மலர் பறித்து மிலைவர். காவினுள்ளும் தோப்பினுள்ளும் எய்தி, இனிய தீவிய நெல்லிக்கனிகளையும் மாங்கனிகளை யும் உண்பர். அவனது மனையின் கண்ணே இரவலர் எண்ணில்லாதவர் இடையறாது வந் தீண்டி அடிசில் ஆர்வர்.

## கிள்ளி பண்ணன் நட்பு

இப்பண்ணனைத் தனக்குரிய நண்பர்களுள் ஒருவனாகக்கொண்டான் கிள்ளி. சோழனோ மணிமுடி கவித்துப் பெருநாட்டை யாளும் வேந்தன். பண்ணனோ சிற்றூராகிய சிறுகுடிக்கண் வாழும் வேளாண் மகன். எனினும் அன்பும் நட்பும் மேல் கீழ் என்னும் வேறுபாடு அறியா வன்றோ? சோழப் பெரு வேந்தனாகிய தான் பெற்றிருந்த புலமையை இப்பண்ணனைப் பாடுவதிற் காட்டினான் என்றால், அவ்வள்ளல்மாட்டு இவ்வேந்தன்கொண்ட அன்புறு நட்பு எவ்வளவு சிறப்புடையது என்பதை அறியலாம். அப்பாட்டில் பெருவேந்தனாகிய தன்னை இன்னவன் எனக்காட்டிக் கொள்ளாது பாணன் ஒருவன் கூற்றில் வைத்துப் பாடியுள்ளான். பாடிய பாட்டின் உயிர்நிலைக் கருத்து எதைப் பற்றியது? பண்ணன் தன்பால் வைத்துள்ள அன்பினைப்பற்றியதா? அன்றி அவன் மேம்படு படையாண்மை பற்றியதா? அன்று; அன்று. பண்ணனின் கொடைநலத்தையே சிறப்பிக்கின்றது. அப்பாடல் "யான் வாழு நாளும் பண்ணன் வாழிய" என்று தொடங்கப் பெறுகின்றது.

ஔவைக்குக் கருநெல்லிக்கனி வழங்கிய அதியமான் அதன் தன்மையை ஔவைக்கு விளக்கிக் கூறவில்லை; தான் உலகில் வாழ்வதைக் காட்டிலும் ஔவையார் என்னும் புலவர் பெருமாட்டி வாழ்வதால் உலகம் பெருநன்மையை அடையும்; சீர் திருந்தும் என்னும் காரணத்தால். அச்செயலால் அதியமான் அஞ்சி பெற்ற நன்மை யாது?

*" . . . . அஞ்சி!*
*பால்புரை பிறை நுதல் பொலிந்த சென்னி*
*நீல மணிமிடற் றொருவன் போல*
*மன்னுக பெரும நீயே தொன்னிலைப்*
*பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட*
*சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது*
*ஆதல் நின்னகத் தடக்கிச்*
*சாதல் நீங்க எமக்கீந் தனையே"—புறம் 91.*

என ஔவையாரால் அழியாத் தமிழால் பாடப் பெற்று இறவாப் புகழ் எய்தியது ஒன்றே. இதனினும் பெறக்கடவதாகிய பேறு வேறு யாது? அதனைக் கிள்ளிவளவன் தான் வாழும் நாளையும் பெற்றுப் பண்ணன் என்னும் பசிப்பிணி மருத்துவன் வாழ்ந்தால் புலவர் பெருமக்கள் கவலையின்றி இனிது வாழ்ந்து இன்பத் தமிழை வளம்பெற வளர்ப்பர் என்று எண்ணினான். அச்சீரிய எண்ணம், "யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய" என்னும் வாழ்த்தாக வெளிப்போந்தது. மன்னன் அவ்வாழ்த்தையே முதலாகக்கொண்டு அப்பண்ணனது சிறப்பைப் பாடி மகிழ்வான் ஆனான்.

## கிள்ளியின் புலமை

பண்ணன்பால் பரிசில் பெறப்போகின்ற பாணன் ஒருவன் தன் சுற்றத்துடன் சிறுகுடிக்கு அண்மையில் செல்லுகின்றான். எதிரே பண்ணனிடம் பரிசில் பெற்றுத் திரும்பும் பாணர் சிலரைக் காண்கின்றான். அவர்கள் பண்ணனை வாழ்த்திக்கொண்டு வருகின்றனர். அவர்களைப் பார்த்துப் "பாணர் கூட்டத்தலைவன் கேட்பதைப்போல, பரிசில் பெற்ற பாணர்களே! என் சுற்றத்தார் வருந்தும் வருத்தத்தைக் காண்மின். பண்ணன் மனையில்

உண்டாகும் ஊண் ஒலி அரவம், பழுத்த மரத்தின் கண்ணே புள்ளினம் ஒலித்தாற்போன்று கேட்கின்றது. மழைபெய்யுங் காலத்தைப் பார்த்துத் தம்முடைய முட்டைகளைக்கொண்டு மேட்டு நிலத்தை அடையும் சிறிய எறும்புகள் சாரையிட்டுச் செல்வதை யொப்பச் சோற்றுத் திரளையையுடைய கையினராய், சிறுர் பலரும் வரிசை வரிசையாய்ச் செல்கின்றனர். ஊண் உண்டலால் உண்டாம் அரவத்தைக் கேட்டும் சோற்றுருண்டை ஏந்திச் சிறுவர்கள் வரிசையிட்டுச் செல்லும் ஒழுங்கினைக் கண்டும் எம்மவர் வருத்தம் மிகுகின்றது. அப்பிணிக்கு மருந்தாகிய உணவினையளிக்கும் மருத்துவனுகிய பண்ணன் வாழிடம் அண்மையதோ? சேய்மையதோ? கூறுமின் எமக்கே" எனக் கிள்ளிவளவன் பாடுகின்ருன். எவ்வளவு அழகாகக் கருத்துச் செறிந்த சொற்களைக்கொண்டு பாடுகின்ருன் வளவன். அவன் புலமை வாழ்க!

கிள்ளிவளவன் எத்துணைப் பேரரசன்! எவ்வளவு வீரமும் வண்மையும் உடையவன்! நல்லிசைப் புலவர்கள். எத்துணையோரால் புகழ்ந்து பாடப் பெற்றவன்!

"செஞ்ஞா யிற்று நிலவு வேண்டினும்
வெண்டிங்களுள் வெயில்வேண்டினும்
வேண்டியது விளைக்கும் ஆற்றல்"

உடையவன் எனவும்,

"மலையில் இழிந்து மாக்கடல் நோக்கி
நிலவரை யிழிதரும் பல்யாறு போலப்
புலவ ரெல்லாம் நின்னோக் கினரே"

எனவும் பாராட்டப்பெற்ற வளவர் தோன்றல், பண்ணனுடைய ஈகையின் சிறப்பை உள்ளம்

மகிழ்ந்து புகழ்ந்து உரைத்தனன் என்ருல், அவ் வள்ளலது ஈகையும் தூய்மையும் அவ்வரசனுக்கு அவனேடிருந்த நட்பின் சீர்மையும் எத்தகைய என்று யாரால் இயம்பலாகும். புலவர் பாடும் புகழ் உடைப் பெருநில வேந்தனுகிய வளவன், தன்னை ஒரு பாணனுக வைத்துப் பண்ணனது ஈகையைப் பாராட்டிப் பாடியிருப்பதனை நினைத் தால் யாருடைய நெஞ்சுதான் உருகாதிருக்கும். கிள்ளிவளவன் பாடிய பாட்டின் முதலடி, யான் உயிர்வாழும் நாளையும் பெற்றுப் பண்ணன் வாழ்வா னுக என்னுங் கருத்துடையது. அஃது ஒரு பாணன் கூற்றில் அமைந்திருப்பினும் கிள்ளிவள வன் உள்ளக் கிடைக்கையன்ருே அது! நாட்டில் வாழும் உயிர்கட்கெல்லாம் உயிராக விளங்கும் இறைவன் தான் வாழ்தற்குரிய நாளையும் பண்ணன் பெற்று வாழவேண்டும் எனக் கருதினன் என்னில், பண்ணன்பால் அவனுக்கு இருந்த அன்பின் திறத்தை என்னென்றியம்புவது? இனி, புலவனுக விளங்கிய இப்புரவலன் பாடலினைக் காண்போம்.

''யான்வாழு நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்கிவன் கடும்பின திடும்பை
யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
ஊணொலி யரவந் தானுங் கேட்கும்
பொய்யா எழிலி பெய்விட நோக்கி
முட்டை கொண்டு வற்புலஞ் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
சோறுடைக் கையர் வீறுவீ றியங்கும்
இருங்கிளைச் சிறுஅர்க் காண்டுங் கண்டும்
மற்றும் மற்றும் வினவுதும் தெற்றென

பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே.
(புறம். 173)

திணை: பாடாண்டிணை துறை: இயன்மொழி

[கடம்பு—சுற்றம்; இடும்பை—வறுமை; யாணர்—புதுவருவாய்; புள்ளிமிழ்ந்தன்ன—பறவையினம் ஒலித்தாற்போன்ற; ஊணொலி—சோறு உண்ணும் போதுண்டாம் ஒலி; எழிலி—மேகம்; வன்புலம்—மேட்டுநிலம்; சில் ஒழுக்கு—சிறிய வரிசை. வீறு வீறு இயங்கும்—வேறு வேறாகப் போகும்.]

**புலவர்களின் கையறு நிலை**

இச்சோழ அரசன் துஞ்சிய செய்தி யறிந்து, பிரிவாற்றாது மாறோக்கத்து நப்பசலையார், ஐயூர் முடவனார், ஆடுதுறை மாசாத்தனார் என்னும் புலவர்கள் பாடிய கையறு நிலைச் செய்யுட்கள் கன்மனங் கொண்டவரையும் கண்ணீர் விட்டழச் செய்யும். அவர்கள் பாடிய கையறு நிலைப் பாடல்களின் கருத்துக்கள்: மாசாத்தனார் என்னும் புலவர், "ஈரமில்லாத கூற்றமே! நீ மிகவும் அறிவிலிபோலக் காரியம் செய்கின்றனையே. வாட்போரில் வல்ல வீரரும் யானையும் குதிரையும் போர்க்களத்தில் மாய, எதிர் நின்றுகொன்று நாள்தோறும் நினது பசியைத் தீர்த்தற்குரிய வலிமையுடைய வளவனை நீ கொண்டாய் ஆயின், இனி நின் பசியைப் போக்குவார் யார்? சொல்வாயாக! விரகு இல்லாமையால் இனி விளைந்து பயன்படுதற்குரிய வித்தினைக் குத்தியுண்டாய். நினக்கு யான்கூறும் இவ்வார்த்தைகள் உண்மையாதலை இன்னமும் காண்பாய்" என்று கூறி வருந்துகின்றார்.

முடவனார் என்பவர், ஆனந்தப் பையுள் என்னும் புறத் துறையில்வைத்து, "கலம்வனையும்

வேட்கோவே! (குயவனே) இருள் ஓரிடத்தே செறிந்து நின்றாற்போலத் திரண்டபுகை, வானின் கண் சென்று பொருந்தும்படிச் சூளைகள் பல போடு கின்றாய் இம்மூதூரில். மண்ணுலகும் இடம் போதா எனக் கூறும்படியுள்ள மிக்க படையினையும் புலவர் புகழ்ந்த பொய்யாத புகழினையும் உடைய கிள்ளிவளவன் தேவருலகத்தை அடைந்தான். அத்தன்மை யுடையோனைக் கவிக்கும் உள்ளிடம் அகன்ற தாழியை நீ வனைய விரும்பினாயாயின், பெரிய இப்பூமியே திகிரியாக, மேருமலையே மண் ணாகவேண்டும். அச்செயல் உன்னால் இயலுமோ? இயலாதாயின் உன்நிலை யாதாம்! நீ மிகவும் இரங் கத்தக்கவன்'' என்று பாடி வருந்துகிறார்.

நப்பசலையார் என்பவர், மிக்க வீரமுடைய வளவனிடம், கூற்றும் நெருங்கமுடியாது என்ற துணிவால், "இக்கிள்ளியின் உயிரைக் கூற்றுவன், மனத்துள் கறுவு கொண்டாயினும், வெளிப்பட நின்று வெகுண்டாயினும், கையொடு மெய்தீண்டி வருத்தியாயினும் கொண்டு சென்றிருக்கலாம். எனி னும் கூற்றம் இவ்வளவன் உயிரைப் பாடுவார் போலத்தோன்றி நின்று கையால் தொழுது வாழ்த்தி இரந்தே சென்றதாகல்வேண்டும்'' என்று இவன் பெருமைகூறிப் புலம்புகிறார்.

இப்பேரரசனைப் பாடிய புலவர்கள்

1. ஆலத்தூர்கிழார். 2. வெள்ளைக்குடி நாகனார். 3. மாறோக்கத்து நப்பசலையார். 4. ஆவூர் மூலங்கிழார். 5. கோவூர்கிழார். 6. இடைக்காடனார். 7. ஆடுதுறை மாசாத்தனார். 8. ஐயூர் முடவனார். 9. நல்லிறையனார். 10. எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார் என்பவர் ஆவர்.

# நெடுஞ்செழியன்*

முன்னுரை

குமரிக்கண்டம் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே கடலால் கொள்ளப்பட்டது என்று கூறினோம் அல்லவா? ஆண்டு வாழ்ந்த மக்கள் வடக்கு நோக்கி வந்து குடியேறினர். அங்ஙனம் குடியேறினோர் முதலில் கபாடபுரம் என்னும் இடத்திலும், சில ஆண்டுகளின் பின்னர் பாண்டிய நாட்டின் தலைநகராகிய வடமதுரையிலும் சங்கம் நிறுவித் தமிழை வளர்க்கத் தொடங்கினர். அச்சங்கத்தில் தமிழை ஆராய்ந்தவரைப்பற்றியும் இயற்றப்பட்ட நூல்களைப்பற்றியும் இறையனார் அகப்பொருள் என்னும் சங்ககால இலக்கண நூல் விரிவாகக் கூறுகின்றது. சமண சமயம் பரவியகாலத்து சமணர்களுக்கும் சைவர்களுக்கும் கருத்து மாறுபாடு ஏற்பட்டுத் தம்தம் மதமே சிறந்தது எனக்கூறி, அனல் வாதம் புனல் வாதம் முதலியன செய்தனர். இந் நிகழ்ச்சிகளைத் தேவாரம் முதலிய துதிப்பாடல் நூல்களில் காண்கின்றோம். அவ்வாறு பூசல்கள் நிகழ்ந்த காலத்தும் தமிழின் பெருமை குன்றவில்லை. அதற்கு மாறாகச் சிறிது சிறிதாக வளரத் தொடங்கியது.

மன்னர்களும் அக்காலத்தில் சங்கத்துப் புலவராக வீற்றிருந்து தமிழை வளர்த்தனர் என்று முன்பு கூறினோம். அவர்கள் தமிழ்ப் புலவர்களுக்கு மொழியை வளர்க்க, இன்றியமையா உதவிகள்

---

* தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

அனைத்தும் தேடித் தந்தனர். புலவர்களின் நல்லுரையைக் கேட்டு, அவர் துணைகொண்டு செங்கோல் மன்னராய் விளங்கினர் வேந்தர். செங்கோல் ஆட்சி நடத்தும் மன்னவன் நாட்டில் வாழும் கொடிய விலங்குகளும் மக்களைத் துன்புறுத்தா என்னும் கொள்கை உலகத்து நிலைபெற்றது எனின், அம்மன்னர் ஆட்சியின் நேர்மையை என்னென்று மொழிவது!

## நெடுஞ்செழியன் பண்புகள்

குடி புறங்காத்து ஓம்பும் மன்னர்கள் வரிசையில் வந்தவன் நம் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் என்பவன். இவன் இயற் பெயரின் முன்னர் உள்ள "தலையாலங்கானத்துச் செருவென்ற" என்னும் தொடர்மொழி அவன் பகைவரை வெல்லுதலிற் சிறந்தவன் என்பதை உணர்த்துகின்றது.

தன் நாளோலக்க மண்டபத்துப் புலவர்கள் நிறைந்திருந்து அழகு செய்யவேண்டும்; அவர் வாயிலாகத் தமிழ்மொழியை வளர்க்கவேண்டும் என்னும் பெருநோக்கம் உடையவனாக விளங்கினான் இப்பாண்டியன். இவன் புலவர் பெருமக்கள் தன்னை மதிக்கவேண்டும் என்னும் சிறந்த நாட்டம் உடையவன். இவன் பாடிய பாட்டொன்றில் பகை வரை வென்று வாகை சூடாவிடில்,

> "ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
> மாங்குடி மருதன் தலைவனாக
> உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின்
> புலவர் பாடாது வரைக என் நிலவரை"

என்று கூறியிருக்கும் சொற்றொடர்கள், இவன் புல

வர்கள் பால்கொண்ட பெருமதிப்பையும், புலவர்கள் தன் நாட்டையும் தன்னையும், புகழ்ந்து பாட வேண்டிய நிலையில் தன்னைத் தகுதியுடையவனாகச் செய்துகொள்ளவேண்டும் என்னும் இவன் பேராவல் நிறைந்த உள்ளத்தையும், தெள்ளத் தெளியக் காட்டுகின்றன.

## மன்னன் கோடைத்திறமும் வீரமும்

இம்மன்னன் இரப்போர்க்கு இல்லையென்னாது வேண்டியவற்றைக் கொடுத்தலை யுடையோன் ஆவன். இது அவன் கூறிய வஞ்சினக் காஞ்சியில், "என்னால் புரக்கப்படுகின்ற கேளிர் துயரம் மிக இரப்பவர்க்குக் கொடாத வறுமையை யான் உறுவேனாக" என்னும் கருத்துடைய, "புரப்போர் புன்கண் கூர, இரப்போர்க்கு ஈயா இன்மை யான் உறவே" என்ற அடிகளால் தெரிகிறது. இவன் கொண்ட வெற்றிகள், வரலாற்றில் சிறந்த இடம் பெறத்தக்கன. அறக்கள வேள்விகள் பல ஆற்றியவன் இவன். வெற்றிக்கறிகுறியாக மறக்கள வேள்விகளும் செய்துள்ளான். இவன் இத்தகைய நல்லியல்புகள் உடையவனாக இருந்ததுடன் புலமைமிக்கவனாகி, புலவரும் போற்றும் நிலையில் செய்யுள் செய்வதிலும் சிறந்து விளங்கினான். இவன் இடைவிடாது போர்ச் செயல்களில் ஈடுபட்டு வாழ்நாள் முழுவதையும் செலவிடுவதைக் கண்ட அவைக்களப் புலவராகிய மாங்குடி மருதனார் என்னும் சங்கத்துச் சான்றோர், பத்துப் பாட்டுள் ஒன்றாகிய "மதுரைக்காஞ்சி" என்னும் மிகப் பெரிய பாடலை, இவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடியுள்ளார். அதில் இவன் அறக்கள வேள்வி பல

புரிய வேண்டியதின் இன்றியமையாமையை வற்புறுத்தி அவன் போக்கினை மாற்றினார்.

இவனைப் பாடிய புலவர்கள் பலர். அவர்கள் குறுங்கோழியூர்கிழார், குடபுலவியனார், கல்லாடனார், மாங்குடிகிழார், இடைக்குன்றூர்கிழார் என்பவர் ஆவர். இப்புலவர்களை ஆதரித்த இம்மன்னன் அவர்கள் பாடிய பாடல்களால் பொன்றாப் புகழ்பெற்று விளங்கினான்.

## நெடுஞ்செழியனின் போர்ச்செயல்கள்

நெடுஞ்செழியன், இளமைப் பருவத்தில் "கோச்சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை" என்னும் வேந்தனைத் தலையாலங்கானம்என்னும்இடத்தில்வென்று சிறைப்படுத்தினான். அன்றியும் இவ்வேந்தன், சேரன், சோழன் ஆகிய இருபெரு வேந்தர்களுடன் திதியன், எழினி, எருமை யூரன், இருங்கோ வேண்மாள், பொருநன் என்னும் ஐம்பெரு வேளிரும் கூடி எதிர்த்த தலையாலங்கானப்போரில், துணைவேண்டாச்செருவென்றியனாக நின்று, இரண்டாம் முறையாக வாகை சூடினான். வேள் எவ்வி என்னும் குறுநில மன்னனின் மிழலைக்கூற்றத்தையும் பழைய வேளிருடைய முத்தூற்றுக் கூற்றத்தையும் கைக்கொண்டான்.

## நீர்நிலை பெருக்கப் புலவர் அறிவுரை

இனி, இம்மன்னனைப் பாடிய புலவர்கள் பாடல்களிலிருந்து இவன் வாழ்க்கையில் நடந்த சில நிகழ்ச்சிகளைப் பார்ப்போம். தலையாலங்கானத்துப் போரில் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையைச் சிறைப்படுத்தினான் எனப் போர்ச்

செயலுட் கூறினேம் அன்றே? அதனுல் சேர நாட்டையும் தன்னுட்சிக்குட்படுத்திச் சிறக்க நாடாண்டவன் எனத் தெரிகிறது. பாண்டிய நாட்டின் மேற்பகுதிக்கண் வாழ்ந்து வந்த குடபுலவியனுர் என்பவர், இவன்பால் கொண்ட பெருமதிப்பால் இவனை நெருங்கி, “நீர்நிலை இன்றி விளை நிலங்கள் வளம் குன்றிப் பொலிவிழந்துள்ளன. ஆதலால், நீர்நிலை பெருக அமைக்கவேண்டும். நீ மறுமையில் துறக்கம் விரும்பினும், இம்மையில் பேரரசனுய்ப் புகழ் எய்தவேண்டினும், நாட்டில் நீர்நிலை பெருகவேண்டும். விதைத்துப் பின்னர் நீருக்காக வானேக்கும் புன்புலம், வேந்தன் முயற்சிக்கு வேண்டுவனவற்றை உதவாது. ஆகவே நீர் நிலைகளைப் பெருக்குவாயாக” என்று எடுத்துரைத்தார். இத்தகைய உரிமையைப் புலவர் பெருமக்களுக்கு இம்மன்னன் வழங்கியிருந்தான் என்பது இதனுல் அறியப்படுகிறது. அரசனிடம் பொருட்கொடை பெறவிரும்பும் புலவர்கள், அவனிடம் பொருள்வளங் குன்ருது மேன்மேலும் பெருகுதற்குரிய செயன்முறைகளை மன்னனுக்கு அறிவுறுத்தும் கடமையுடையவர். ஆதலால் ஈண்டுக் குடபுலவியனுர் நீர் நிலைகளைப் பெருக்குக என அறிவுரை வழங்கினுர்.

## புலவர்கள் பாராட்டுரை

தலையாலங்கானத்து வெற்றிக்குப் பின்னர் அவனைப் பாராட்ட விரும்பி, குடபுலவியனுர் அவனிடம் சென்றுர். அவரைக் கண்ட வேந்தன் அன்புடன் வரவேற்றுத் தழுவிக்கொண்டான். அவனுல் தழுவிக்கொள்ளப்பட்ட இச்சான்றேர்

அவனது பேரன்பை வியந்து, "செழிய, நின் மார்பு புலியைப் படுப்பது குறித்து, வேட்டுவன் கல்லிடத்தே சேர்த்திய அடார் என்னும் பொறியை ஒக்கும் என்று புல்லினேன். எம்போல்வார்க்கு இன்பமும் பகைவர்க்குத் துன்பமும் பயப்பது நின்மார்பு" என்று பாராட்டிச் சிறப்பித்தார். பாண்டியன் படையிலுள்ள யானைகளாற் கலக்கப்பட்ட பகைவர் நாட்டு நீர்த்துறைகளையும், வில்வீரர் தாம் கொள்வதுகொண்டு எஞ்சியவற்றை† அழித்துப் பாழ் செய்யும் புலங்களையும், ஊர்தோறும் காவல் மரங்கள் வெட்டப்பட்ட சோலைகளையும், எரியிட்டுக் கொளுத்திய இடங்களையும் புலவர் கல்லாடனார் கண்டார். இனியும் எவரேனும் இப்பாண்டியனைப் பகைத்துக் கொள்ளின் அவர்களுக்கும் அந்நாட்டிற்கும் இந்நிலையே ஏற்படுங்கொல் என்று எண்ணினர். ஆள் வழங்குதலின்றிப் பாழ்பட்ட காட்டுவழியே வந்த புலவர், அரசனைக்கண்டு நின்னைக்காணவே வருகின்றேன் என உரைக்கின்றார். தோல்வியுற்ற நாட்டின் வீரர்களில் பலர் களத்தே இறந்து பட்டிருப்பர் அன்றோ? அவர் தம் வாழ்க்கைத்துணைவியர், தம் இளம் புதல்வரை ஓம்புதற் பொருட்டு இறந்து படாது கீரைக்கறி சமைத்துத்

---

† இரண்டாவது உலகப்போர் நிகழ்ந்த நாட்களில் வீரர்கள் தம் நாட்டில் விளைநிலங்கள் நன்கு விளைந்ததன் பயனாக சேமிப்புக் களஞ்சியங்களில் உள்ள பொருள்களைப் பகைவர்க்கு அஞ்சி எடுத்துக் கொண்டு போகமுடியாத நிலையில் எதிர்பாராது பகைவர் படை எடுத்துவரின் தம்மால் கொள்ளமுடிந்த அளவிற்குத் தானியங்களைக் கொண்டு எஞ்சியதைப் பகைவர்க்கு உதவாவண்ணம் தம் விளை புலங்களைத் தாமே தீயிட்டு அழித்தனர் என செய்தித்தாள்களில் நாம் படித்தோம். இச்செயலைப் "பொசுக்கல் கொள்கை" (Scorched Earth Policy) என்பர் இக்காலத்தவர்.

தின்று உயிர் வாழ்கின்றார்கள் என்பதைப் புலவர் வெளிப்படையாகக் கூறாமல், "ஆண்மான் புலியால் கொல்லப்படவே மடப்பிணை, சிறுமறி தழீஇ, பூளை என்னும் செடி ஓங்கி வளர்ந்த பாழிடத்து வேளை வெண்பூக்களைத்தின்னும்" என்று குறிப்பாகக் காட்டில் கண்ட காட்சியைக் கூறுகின்றார். புலவரின் நோக்கம் போர்க் கொடுமையை மன்னனுக்கு உணர்த்தி அவன் மனம் மாறச் செய்ய வேண்டும் என்பதே.

போரில்சேரனும்சோழனும் பாண்டியனுடன் பொருது அவன் படைக்கு ஆற்றாது அவர்கள் எய்த படைக்கலங்களுக்கு இலக்காகி மாண்டனர். போரில் இறந்துபட்ட வீரர் சிலரின் உரிமை மகளிர் அறல் போன்ற தம் கூந்தலைக் கொய்துகொண்டு கைம்மை நோன்பினை மேற்கொள்ளத் தொடங்கினர்.

## மாங்குடி மருதனார் வாழ்த்துரையும் அறிவுரையும்

மதுரைக்காஞ்சி பாடிய மாங்குடி மருதனார் இயற்றிய பாடல் ஒன்று புறநானூற்றில் காணப்படுகின்றது. அப்பாட்டில், "மிழலைக் கூற்றத்தையும் முத்தூற்றுக் கூற்றத்தையும் வென்றுகொண்ட நெடுஞ்செழிய! நின் நாண்மீன் (ஆயுள்) நிலைபெறுக. நின் பகைவர் ஆயுள் கெடுக. நீ வாள் வீரர் வாழ்த்த, பரிசிலர் புகழ்பாட, மகளிரொடு மகிழ்ந்து, இனிது ஒழுகுவாயாக. அங்ஙனம் ஒழுக வல்லாரையே வாழ்ந்தோர் என்பர். இவ்வுலகத்தே தோன்றி புகழ் தோற்றுவியாது, உயிர் வாழ்ந்து விளிந்தவர் பலராயினும் அவர் வாழ்ந்தோர் எனப்படார்" என வாழ்த்துகின்றார்.

வேறொரு பாட்டில், "நின்னால் போர்க்களத்தே அம்பு முதலிய படைக்கலங்களால் பட்டு வீழ்ந்த பகைவீரர், துறக்க உலகம் புக்கு இன்புறுகிறார். ஆதலின் அவர் நோற்றவரே" எனச் சிறப்பிக்கின்றார். இவன் மறக்கள வேள்வி செய்தவன் என்று கூறப்படுகின்றான். மறக்கள வேள்வியாவது யாதெனின், போர்க்களத்தில் முடித்தலையை அடுப்பாகக்கொண்டு, குருதிப்புனலாகிய உலையின் கண் தலையும் மூளையும் பெய்து, தோளாகிய துடுப்பால் துழாவி, அடப்பட்ட உணவால் வேள்வி செய்தல்.

## இடைக்குன்றூர்க்கிழார் புகழுரை

தலையாலங்கானப் போரினை நேரில் கண்ட இடைக்குன்றூர்க்கிழார் என்னும் புலவர் பெருந்தகை, "ஒருவனை ஒருவன் கொல்லுதலும் தொலைதலும் நிகழுமிடத்து, வெற்றி பெற்றோர் பலரும் பலருடைய துணைபெற்று, வென்றதைக் கேள்வியுற்றுள்ளோம். ஆனால் ஒருவனே தனித்து நின்று பலராய்க்கூடி எதிர்ப்போரை வென்றது கேட்டிலேன். பாண்டியன் ஒருவனாய் நின்று, தன்பீடும் செம்மையும் அறியாமல் எதிர்ந்த பகைவர் எழுவரின் நல்வலம் அடங்கவென்றது, இன்றுவரை யாம் கேட்டதன்று" என்று வியந்து கூறியுள்ளார்.

அவரே போர்க்களத்தில் பாண்டியன் தேர் ஊர்ந்து வந்து நின்ற காட்சியையும் போர் செய்த முறையையும் அழகுபெறக் கூறுகிறார். "மிக்க இளம் பருவத்தே போர் செய்ய வந்துள்ளான்; இவன் வெற்றி பெற்ற பின்னரும், பகைவர் எழுவரையும் தனித்தே நின்று வென்றுவிட்டோம் என்ற தருக்கோ பெருமிதமோ கொள்ளவில்லை"

என்பதைக் கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்: "கிண் கிணியைக் களைந்து இப்போதுதான் கழல் அணிந் தான். சென்னியில் வேம்பின் தளிரும் உழிஞைக் கொடியும் விரவித்தொடுத்த கண்ணியையுடைய னாயினன். இது வரையில் அணிந்திருந்த தொடியை நீக்கிய கையில் வில்லைப் பற்றிக்கொண்டு தேர் மொட்டினைப் பற்றி (தேரின் முன் தாமரை வடிவமாகச் செய்துவைக்கப் பெறுவது; கொடிஞ்சி எனக் கூறப்படும். இது வீரன் கைப் பிடிப்புக்காக அமைக்கப் பெறுவது) நிற்கின்றான். மார்பில் தார் அணிந்துள்ளான். ஐம்படைத் தாலியை இன்னமும் களைந்திலன். பாலருந்துவதை விட்டு இப்போது தான் சோற்றுத் திரளையை உண்ணத் தலைப்பட்டான். இத்துணை இளையோன் புதியராய் மென்மேலும் வெகுண்டு வரும் வீரரைக் கண்டு வியப்பதும் செய்கிலன். இகழ்வதும் இலன். அவர்மீது பாய்ந்து பற்றிக் கீழே கவிழ்த்து அவர் தம் உடல் கீழே நிலத்தில் விழக் கொன்றபோதும் அவன் முகத்தில் மகிழ்ச்சியோ, இவ்வாறு செய் தோம் என்ற செருக்கோ ஒன்றும் தோன்றுகின்றி லது. இவன் வீரம் இருந்தவாறு என்னே!" என்று கூறி வியக்கின்றார்.

## நக்கீரர் மாங்குடி மருதனார் புகழுரைகள்

இப்பாண்டிய மன்னனின் அவைக்களத்துத் தலைமைப் புலவராகிய மாங்குடி மருதனார் பாடிய மதுரைக்காஞ்சி என்னும் பாடலும் நக்கீரனார் பாடிய நெடுநல்வாடை என்னும் பாடலும் பத்துப் பாட்டுள் இவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்றவை. மதுரைக்காஞ்சி என்

னும் பாட்டு மருதனர் நெடுஞ்செழியனுக்கு வீடு பேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையை உணர்த்துவதாக அமைந்துள்ளது. நெடுநல்வாடை என்னும் பாட்டு, பகை மேற்சென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் தலைவி, அவ்வருத்தம் தீரும்படி, அவன் பகையை வென்று வருவானாக என்று கொற்றவையைப் பரவி வேண்டுவதாக அமைந்துள்ளது. இப்பாடல்கள் இரண்டினுள் மதுரைக்காஞ்சியில் நாம் அறியலாகும் செய்திகளைக் கீழே தொகுத்துக் காண்போம்:

"போர் புரிந்து பகைவரை வெல்லுவதையே கருதித் தன் வாழ்நாளிற் பெரும் பகுதியைக் கழித்த பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பல்வேறு நிலையாமையை அறிவுறுத்தப் புகுந்த ஆசிரியர் மாங்குடி மருதனர், முதற்கண்ணே தம் கருத்தைப் புலப்படுத்தாமல், அவன் முன்னேருடைய நல்லியல்புகளையும் அவனுடைய கொடை, வீரம், நற்குணம் முதலியவற்றையும் எடுத்துப் பாராட்டிப் புகழ்ந்து, பின்னர் தம் கருத்தைக் குறிப்பாகச் சில அடிகளிலே புலப்படுத்திச் செல்கின்றார். அதன் பின்பு மதுரையின் பெருவளத்தைப் பரக்கக் கூறியிருத்தல் அப்புலவர் பெருமானது உலகியலறிவையும் மன்னவர்களிடத்து ஒழுகும் முறைகளையும் தெரிவிக்கின்றன. மதுரைக் காஞ்சியில் இப்பாண்டிய மன்னன் காலத்திய நிகழ்ச்சிகள் வரலாற்று நூலினும் அழகாகக் கூறப்பட்டுள்ளன.

1. நெடுஞ்செழியன் பகைவர்கள் மேல்படையெடுத்துச் சேர்தலும்; 2. அவர்கள் அரணங்களையும் காவல் மரங்களையும் அழித்தலும்; 3. தன்னை வல் கேட்போர்க்கு அருள் செய்து, கேளாதாரை

அழித்து அவர்தம் நாடுகளைப் பாழாக்கிய முறைகளும்; 4. தலையாலங்கானத்துப் பெற்ற பெரு வெற்றியும்; 5. சாலியூர், முதுவெள்ளிலை முதலிய ஊர்களைக் கொண்டதும்; 6. பரதவரை அடிப்படுத்தியதும்; 7. பகைவரைவென்று கொணர்ந்த பொருள்களை நட்டோருக்கும் புலவர் முதலியோர்க்கும் தனக்கெனப் பாதுகாவாது வழங்கும் வண்மையும்; 8. பிறரைப் பணியாப் பெருவிறலும்; 9. முந்தையோர் அடிவழிப் பிழையா மூதறிவும்; 10. பொய் தவிர்ந்து வாய்மை மொழியும் பொற்பும்; 11. கொடுத்துப் புகழ் கொள்ளும் கொள்கையும் பிற அருஞ் செயல்களும் மதுரைக் காஞ்சியில் திறம்படக் கூறப்பட்டுள்ளன.

மற்றும், மதுரையில் நடைபெற்ற 1. நாளங்காடி, அல்லங்காடி வருணனைகள்; 2. அறங்கூறும் அவையத்தார், காவிதி மாக்கள் முதலியோர் இயல்புகள்; 3. மதுரையில் உள்ளார் நாட்காலை முதல் மாலை வரையில் பொழுது போக்கும் முறைகள்; 4. மதுரையிற் கொண்டாடப்பெறும் திருவிழாக்கள் முதலியனவும்; 5. நெடுஞ்செழியன் நாட்காலையில் வீரர்களுக்கும் பாணர் முதலியவர்களுக்கும் ஆங்குக் கிடைத்தற்கரியவாய், வேற்றுப் புலத்திலிருந்து கொண்டுவந்த பொருள்களையும் களிறு முதலியவற்றையும் வழங்கும் நிகழ்ச்சியைக் கூறும் பகுதியும், அப்பகுதியில் வீரர்கள் ஆற்றிய பலவகை வீரச் செயல்களும் பிறவும் அப்பாட்டில் சிறப்பிக்கப் பட்டுள்ளன.

நெடுநல்வாடை என்னும் பாட்டினுல் நாம் அறியும் செய்திகள்: அரசன், புண்பட்ட வீரர்கள்-பால் அன்பு பூண்டு, நடுயாமம் என்றும் பாராமல்

மழை பெய்துகொண்டிருத்தலையும் கருதாமல் சென்று, முகமலர்ந்து, அவர்களைக் கண்டு ஆற்று விக்கும் செய்தி இறுதியாகக் கூறப்படுகின்றது. இதனால் அரசனுடைய எளிமையும் வீரர்களது பெருமையும் ஒருங்கு தெரிகின்றன. மற்றும் இம் மன்னனின் கலங்காத உள்ளம், அசையாத அமைதி, தோல்வியால் ஒரு சிறிதும் கலக்கம் உறாத உளத் திண்மை போன்ற சிறப்பியல்புகள் தெற்றென விளங்குகின்றன. அரசன் முன்னே செல்ல, அவன் பின் செல்லும் பரிமா, யானை ஆகிய விலங்குகள் பாகர் இல்லாமல் இருக்கவும் தாமே ஒழுங்காகச் செல்லுகின்றன, வீரன் ஒருவன் தோள்மீது அமைத்த கையனாய்ச் செல்கின்றான் மன்னன். புண்பட்ட ஒரு வீரனைக் கண்டு தழுவிக் கொண் டான். அன்பில் முதிர்ந்த நம் மன்னனுக்கு உயர்ந் தார், தாழ்ந்தார் என்னும் வேற்றுமை உண்டோ? இஃது எதைக் காட்டுகின்றது? அரசன், படை யாட்களுள் தானும் ஒருவன், நாட்டின் பொதுநலத் திற்கு உழைப்பவன் என்பதையும், படையாட்களும் அரசனும் தோழர்கள் என்பதையும் காட்டுகின்றன அல்லவோ? கலங்கா உள்ளம், தெள்ளிய அறிவு, தூய அன்பு, தக்க ஆள்வினை ஆகிய இவற்றினை அரசன் செயலிற் காண்கின்றோம்.

நக்கீரனார் தம் பாட்டின் இறுதியில், அரசனின் மாலைவெண்குடையைக் குறிப்பிடுகின்றார். வெண் கொற்றக் குடை உலகத்து நடையை (ஒழுக்கத்தை) உயர்த்துவதற்கு அறிகுறி. வேந்தன், தான் திருந் தினால் பிறர் திருந்துவர்; குடிகள் ஒழுக்கம் உயர, அரசன் ஒழுக்கம் திருந்தவேண்டும் என்ற கருத்தை உணர்த்தவே நக்கீரனார் இறுதியில் அரசனின்

மாலை வெண்குடையைக் குறித்துள்ளார் எனக் கொள்ளலாம். தோழமை கொண்மின்; வேற்றுமை அகற்றுமின்; உயர்வு தாழ்வில்லை; ஆருயிர்க்கெல் லாம் அன்பு செய்ம்மின்; அவற்றிலெல்லாம் ஒருமை காண்மின்; அவற்ருெடெல்லாம் இரண்டறக்கலமின்; ஒன்றே ஆகுமின்; அவற்றி லெல்லாம் இருப்பவன் இறை, என்பன போன்ற ஒழுக்கங்கள் அப்பாட்டில் உணர்த்தப் பட்டுள்ளன. மாங்குடி மருதனுர் பாடிய பாட்டு "இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய, மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும், மகிழ்ந்தினிது உறைமதி" என்னும் வாழ்த்துரையோடு முடிகின்றது.

## நெடுஞ்செழியனைப் பாடிய புலவர்கள்

இவ்வேந்தனைப் பாடியவர், குடபுலவியனுர், கல்லாடனுர், மாங்குடிகிழார், இடைக்குன்றூர்கிழார், மாங்குடி மருதனுர், நக்கீரனுர் என்பவராவர். இத் தகைய பெருவேந்தன் புலவர் பெருமக்கள் கூட்டுறவால் தானும் அவர்களுள் ஒருவனுகப் பாட்டியற் றும் ஆற்றல் பெற்றதில் வியப்பென்ன?

## நெடுஞ்செழியன் பாடிய பாடல்

"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளையன் இவனென உளையக் கூறிப்
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்று
உறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணுது

கொடியனெம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா இன்மையான் உறவே"

(புறம். 72)

திணை: காஞ்சி. துறை: வஞ்சினக் காஞ்சி.

*மீக்கூறுநர்*—மிகுத்துச் சொல்பவர்; *உளைய*—வெறுக்க; *படு*—ஒலி; *இரட்டும்*—மாறியிசைக்கும்; *பாவடி*—பரந்த அடி; *பணைத் தாள்*—பெரியகால்; *மா*—குதிரை; *படையமை*—படைக்கலத் தொழில் அமைந்த; *மறவர்*—வீரர்; *உறுதுப்பு*—மிக்க வலிமை; *உடல்*—மாறுபாடும்; *செருக்கி*—பெருகி; *சிறுசொல்*—இழிவான சொல்; *கெழு*—மிக்க; *சமம்*—போர்; *அகப்படேன்*—கைக்கொண்டிலேன்; *சென்னிழல்*—சென்றடையும் நிழல்; *இறை*—வேந்தன்; *நிலைஇய*—நிலைபெற்ற; *நிலவரை*—எல்லை; *புன்கண்கூர*—துயரம் மிக; *இன்மை*—வறுமை.

# நலங்கிள்ளி*

## கிள்ளியின் முன்னோர்

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மிக்க கொடையும் வீரமும் உடையோன் எனவும், செய்யுள் செய்தலில் வல்லவன் எனவும், சேரனைக் கருவூரில் முற்றியிருந்து வெற்றி கண்டவன் எனவும், புலவர் பாடும் புகழுடையோன் எனவும் முன்னர் படித்தோம். அவனுக்கு உடன் பிறந்தவன் ஆவன் இங்குக் கூறப்படும் நலங்கிள்ளி. இவனுக்குச் "சேட் சென்னி" என்னும் (புறம். 27) வேறொரு பெயரும் உண்டு. இப்பெயர் இவ்வரசனின் பாட்டன் பெயராதல் கூடும். புட்பகை என்றும், தேர் வண் கிள்ளி என்றும் வேறு பெயர்களும் இவனுக்கு உண்டு. இவனுக்கு "மாவளத்தான்" என்று ஒரு தம்பியும் இருந்தான் எனக் கூறப்படுகிறது. இவனும் தன் தமையனைப் போலவே மிக்க வீரமும், கொடையாண்மையும், புலவர் புகழும் பெருமையும், தானே கவி செய்யவல்ல புலமையும் உடையவனாக விளங்கினான். இச்செய்திகள் அனைத்தையும் புறப் பாடல்களால் அறியலாம்.

## கிள்ளியின் ஆட்சி

சோழ நாட்டின் ஒரு பகுதியைக் கிள்ளிவளவன் புகார் நகரைத் தலை நகராகக் கொண்டு ஆண்டு வந்தான். அச்சமயத்தில் மற்றொரு பகுதியை, உறை

---

* சோழன் நலங்கிள்ளி

யூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன் நெடுங்கிள்ளி என்பவன் ஆவன். இருவருக்கும் எக்காரணத்தாலோ பகை மூண்டது. இளவரசனாகிய நலங்கிள்ளி தன் தமையன் கிள்ளிவளவனுக்காகச் சென்று, ஆவூர், உறையூர் முதலிய இடங்களில் நெடுங்கிள்ளியுடன் பொருவதன் பொருட்டு முற்றுகையிட்டான். ஆவூர், சோழன் நலங்கிள்ளிக்குரியது. நலங்கிள்ளியின் பகைவனை நெடுங்கிள்ளி ஆவூர் சென்றிருந்தான். அவ்வூர் தனக்குரியதாகையால் அதனைத்தான் பெறுதற்காகச் சோழன் நலங்கிள்ளி ஆவூரை முற்றுகையிட்டான். முற்றுகைக்கஞ்சி அடைபட்டிருந்தான் நெடுங்கிள்ளி. நலங்கிள்ளியின் முற்றுகையால் விளைந்த விளைவுகள் மிகக்கொடியன. "யானைகள் வெய்துயிர்த்து இடியென முழங்கினவாம்; குழவிகள் பாலின்றி அலறியழுதனவாம்; மகளிர் பூவின்றி வறுந்தலை முடித்தனராம்; மனையிடங்களில் எழும் அழுகைக் குரல் அரண்மனைக்கண் கேட்டதாம்" இத்தகைய கொடிய முற்றுகையை எதிர்த்துப் போர் செய்யும் வலியற்ற நெடுங்கிள்ளி தன் தலைநகராகிய உறையூருக்கு உய்ந்து ஓடினன். நலங்கிள்ளியும் அவண் சென்று முற்றினன். அங்கும் நெடுங்கிள்ளி அடைபட்டுக் கிடந்தான். இச்செய்தி அறிந்த கோவூர்கிழார், போர் செய்யத் துணிந்து நின்ற இருவரும் மனங் கலந்து வாழும்படிச் சந்து செய்தார். இறுதியாகக் "காரியாறு" என்னும் இடத்தில் நெடுங்கிள்ளியை நலங்கிள்ளி கொன்றான். இச்செய்தி "காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி" என வழங்கும் செய்தியால் உணரப்படுகிறது. அதன் பின்னர் தான் உறையூர் கிள்ளிவளவற்குத் தலை நகராயிற்று.

## நலங்கிள்ளியின் பண்புகள்

இவ்வேந்தன் தனக்கு வேண்டுழியெல்லாம் அறவுரையும் அறிவுரையும் வழங்கும் உரிமையைப் புலவர்களுக்கு அளித்து அவர்கள் கூட்டுறவை மிகுதியாக நாடியவன். இம்மன்னன் தன் வலிமை யனைத்தும் வெளிப்படாமல் அடக்கி அவ்வடக்கமே உருவாகக் கொண்டு விளங்கியவன். இவன் வாழ் நாளின் பெரும் பகுதியைப் பாசறையில் தங்கியே காலங்கழித்தமையால் இவன் வெற்றியையே நாட்ட மாகக் கொண்டவன் என்பதும், பகைவர் நாட்ட கத்துக் கைக்கொண்ட பொருள்களைப் பாணர் விறலி யர் கூட்டம் முகக்க அளிக்கும் வண்மையுடைய வன் என்பதும் புலப்படுகின்றது. புலவர் கூறும் பொன்மொழிகளைப் போற்றிப் பகை மறந்து மனங் கலந்து வாழ்ந்தவன் எனப்படுவதால் அவன் அறிவு டைமையும் புலவர்கள்பால் வைத்திருந்த பெரு மதிப்பும் விளங்குகின்றன. சோழன் தன்னிடம் பரிசு பெறவரும் பாணர்க்கு உண்டியும் பிற செல் வங்களும் அவர்கள் வெறுப்ப நல்குவன் என்பதும் புலவர் பாடல்களால் அறியலாம். இனி இவற்றின் விரிவைக் காண்போம். இவ்வேந்தன் விழுமிய உள்ளம் உடையோர்க்கு அரசுரிமை தகுமேயன்றி உள்ளத்தாற் சிறியவர்க்குப் பொருந்தாது என்னுங் கொள்கையுடையவன்.

## இம்மன்னனைப் பாடிய புலவர்கள்

1. உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் புலவர் நான்கு பாடல்கள் பாடியுள்ளார். 2. கோவூர் கிழார் ஐந்து பாடல்கள் பாடியுள்ளார். 3. ஆலத் தூர்கிழார் என்பவர் ஒரு பாடல் பாடியுள்ளார்.

புலவர் அறிவுரை

இச்சோழனை ஒருகால் முதுகண்ணன் சாத்தனார் சென்று கண்டு அவனுக்கு அறிவுரைகள் வழங்கி மீண்டார். அவை வருமாறு: "உலகத்தில் எண்ணற்ற மக்கள் பிறக்கின்றனர். ஆனால் அவருள் சிலரே உரையும் பாட்டும் பெறும் புகழுடையவராக விளங்குகின்றனர். ஏனையோர் தாமரை இலையைப்போல பயன் படாது மாய்கின்றனர். புலவர் பாடும் புகழுடையோர் செய்தற்கரிய நல்வினைகளைச் செய்துமுடித்த பின்பே வானத்தில் பாகனால் செலுத்தப்படாது தானே செல்லவல்ல ஊர்தியில் விண்ணுலகு செல்வார்கள் என்று அறிந்தோர் கூறுவர். வளர்தலும் தேய்தலும், பிறத்தலும் இறத்தலும் உடையது உலகம். இதனைத் திங்கள் நாள் தோறும், கல்வியின்மையால் அறியக்கூடாத நிலையிலுள்ள மடவோரும் அறியக்காட்டுகின்றது. இவ்வுலகத்தில் வருந்தி வந்தோருக்கு வேண்டுவன அருளும் வண்மைதான் வென்றிக்குப் பெருமையளிப்பது. நீ அதனைச் செய்க" என்றும் (புறம். 27) "மக்கட் பிறப்பில் காணப்படும் சிதடும் உறுப்பில் பிண்டமும் கூனும் குறளும் ஊமும் செவிடும் மருளும் மாவும் ஆகிய எண் வகை எச்சங்களும் ஒருவற்குப் பிறப்பில் பொருந்துவது குற்றமாகக் கருதப்படும். கானத்தை இடமாகக்கொண்டு வாழும் நின் பகைவர் போலாது, நீ கூத்தர் ஆடுகளம் போலும் அகநாட்டையுடையை. நீ பெற்ற செல்வம் அறம் பொருள் இன்பங்களை ஆற்றுவதற்காகவே யாகும். அவற்றை ஆக்குவதற்குதவாது உன் செல்வம் கழிதல் உனக்கு மேல்கூறிய பிறப்புண்டாகப் பண்ணும்" என்றும் (புறம். 28)

"வேந்தே நின்திருவோலக்கத்தில் நின்புகழ் பாடும் பாணர் நிறைதல் வேண்டும்; பாணர் இசைகேட்ட பின்பு மகளிர் கூட்டத்தின் இன்பத்தை நீ நுகர்தல் வேண்டும். கொடியோரைத் தெறுதலும் நல்லோரைத் தெருமல் அளித்தலும் தவிராது, நிலவுதல் வேண்டும். மற்றும் நீ சிற்றினம் சேர்தலாகாது. நீ வழங்கும் நாடுபெற்றுச் சிறப்படையும் படைத் தலைவர், நின்பால் வருநர்க்கு உதவிசெய்யும் பண்புடையவராகும் வண்ணம் நின்செய்கை முறைப்பட அமைதல்வேண்டும். கூத்தாடும் அவைக்குழாம் போல கூடுதலும் கழிதலும் உடையது இவ்வுலகம். நின் செல்வம் அனைத்தும் உனக்கு இசை உண்டாக்குதற்பொருட்டே செலவிடப்படவேண்டும் (புறம். 29) என்றும் அறிவுரைகள் பல வழங்கினர்." இவ்வாறு புலவர்கள் அரசருக்கு இடித்துரைப்பதன் நோக்கம், மன்னனின் சீதமதிக் குடைக்கீழ்ச் செம்மையறம் நிலைத்திருப்பச் செய்தலேயாம்.

> "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
> கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்பது வள்ளுவர் வாய்மொழி யன்றோ?

## நலங்கிள்ளியின் அடக்கம்

இவன் அடக்கத்தை வெளிப்படுத்த விரும்பிய சாத்தனர், "ஞாயிறு செல்லும் வீதியும், அஞ்ஞாயிற்றினது இயக்கமும், இவ்வியக்கத்தாற் சூழப்படும் நிலவட்டமும், காற்றியங்கு திக்கும், ஆதாரமின்றித் தானே நிற்கின்ற ஆகாயமும் ஆகிய இவற்றை நேரிற்சென்று கண்டறிந்தவர்போலத் தம் அறிவால் ஆராய்ந்துரைப்பாரும் உளர்.

அவர்களாலும் ஆராய்ந்தறியப்படாத அத்துணை அடக்கமுடையவனுய்க் கல்லைக் கவுளில் அடக்கி யுள்ள களிறுபோல, வலிமை முழுதும் வெளித் தோன்ருதவாறு அடக்கிக்கொண்டு விளங்கு கின்ருய். ஆதலால் புலவர்கள் உன்னை எவ்வாறு வெளிப்படையாகப் பாராட்டுவர்" என்று கூறிப் பாராட்டுகின்ருர் (புறம். 30).

## இவ்வேந்தனின் வென்றி நலம்

கோவூர்கிழார் என்னும் புலவர் "வேந்தே! நீ நல்லிசை வேட்டம் வேண்டி பாசறையின் கண் இருப்பதற்கே விழைகின்ருய். நின் யானைப் படை, பகைவர் அரண்களைச் சிதைத்தும் அடங்கா வாய் மைந்துற்றுத் திரிகின்றன. நின் வீரர்களோ, பகைவர் நாடிடையிட்டும் காடிடையிட்டும் மலை யிடையிட்டும் நெடுந்தூரத்தில் உள்ளரென அறிந் திருந்தும், அங்குச் சென்று போர்புரியச்சிறிதேனும் அஞ்சுதலிலர். இத்தன்மையால் குணகடற்கரைக் குரிய நீ, குடகடல் அடைந்து பின் அங்கிருந்தே வடபுலம் நோக்கி வருவாய் என எண்ணி ஆண்டு வாழ்கின்ற வடபுலத்தரசர்கள் இரவெல்லாம் உறக்க மின்றிக் கிடக்கின்றனர் (புறம். 31) எனப் புகழ் கின்றனர். மேலும் தென்னவன் நன்ஞட்டிலுள்ள ஏழெயில்களின் கதவுகளை அழித்துக் கைக்கொண்டு அவற்றில் நின்புலிப்பொறியைப் பொறிக்கும் ஆற்றலுடையை. நின்னைப்பாடுவோர் வஞ்சிப் பாட்டுப்பாட, நின்படைவீரர் தங்கியிருக்கும் பாச றைக்கண்ணே அமைந்துள்ள தெருவில், ஊன் சோற்றுத்திரள் கொடுக்கப்படும். இத்தகைய முனை யிருக்கைகள் பல உள்ளன. ஊரிடத்தே அல்லியம்

என்னுங் கூத்துப்பல நிகழ்கின்றனவாயினும் விழாக்களைக் காட்டிலும் மேற்சொன்ன முனை யிருக்கைகளே அதிகமாக உள்ளன (புறம். 33) என்று கூறுகின்றார்.

மற்றும் இவ்வேந்தனின் தம்பியாகிய மாவளத் தானைத் தாமற்பல் கண்ணனார் பாடிய பாட்டில், "புருவிற்காகத் துலைபுக்க பெரியோன் மரபில் வந்த வனே" என முன்னோர் சிறப்பினைக் கூறிபின், "நேரார்க்கடந்த முரண்மிகு திருவின் தேர்வண் கிள்ளி தம்பி" என்று நலங்கிள்ளியின் பெருமை யையும் சேர்த்துப் பாடுகின்றார். இவற்றால் நலங் கிள்ளியின் போர்வென்றியும் தெரிகின்றது.

"இத்தண்பணை நாடு அவன் கருதிய முடிபே யுடையது. ஆதலால் வஞ்சி நகரை நமது சுற்றத் தினர் அடுகலத்தை நிறைக்கும்பொருட்டு விலையாகத் தருவான். மற்றும் விறலியர் சூடும் பூவிற்கு விலையாக மாடமதுரை பெறுக" எனத்தருவான். "அவனை நாம் பாடுவோம் வம்மின்" (புறம். 32) என்று கோவூர்கிழார் இவன் கொடைசெய்யும் இயல்பினைப் புகழ்கின்றார்.

### கோவூர்கிழார் சந்து செய்வித்தல்

இவ்வேந்தன் நெடுங்கிள்ளியுடன் ஆவூர், உறையூர் ஆகிய இவ்விரண்டு இடங்களிலும் போர் செய்ய ஆயத்தப்பட்டு முற்றுகை செய்திருந்தான் என்றும், கோவூர்கிழார் என்னும் புலவர்பெருந் தகையால் இருவரும் சந்து செய்விக்கப்பட்டனர் என்றும் முன்பு உரைத்தோம். உறையூரில் அடை பட்டுக் கிடந்த நெடுங்கிள்ளியையும் முற்றியிருந்த

நலங்கிள்ளியையும் சந்து செய்விக்க விரும்பிய கோவூர்கிழார் பாடிய பாடல் மிக நயமானது.

## பாடலின் கருத்து

"போர்செய்யத் துணிந்திருக்கும் நீவிர் இருவரும் சோழர் குடியைச் சார்ந்தவர்கள். இருவரும் ஒரு போரில் வெல்வது என்பது இயலாது. உம்மில் தோல்வியுறுகின்றவர் யாராயினும் சோழர்குடி தோற்றது என்றுதான் உலகத்தார் கூறுவார்கள். அன்றியும் ஒரு குடியிற்பிறந்த இருவரும் போர் செய்வது உம்மைப்போன்ற வேந்தர்களாகிய சேர பாண்டியர் இருவருக்கும் உடம்பு பூரிப்பதற்கேது வாகிய உவகையை யுண்டாக்கும். ஆதலால் போர் ஒழிமின் என்பதாம்" (புறம். 45).

## புலவர்களும் புரவலர்களும்

புலவர்கள் ஏன் அடிக்கடி குறுநில மன்னரிடமும் பெருநில வேந்தரிடமும் செல்லவேண்டும் எனக் கேட்கலாம். அதற்குக் கோவூர்கிழாரே பதில் கூறுகின்றார். "வண்மையுடையோரை நினைத்துப் பழுமரம் தேரும் பறவைபோலச் சென்று, திருந்தாத நாவால் தாம் வல்லபடி பாடி, ஆண்டுப்பெற்ற பரிசிலான் மகிழ்வதற்கும், சுற்றத்தை யூட்டித் தாமும் பொருளைப் பாதுகாவாது உண்டு, உள்ளம் மலர்ந்து, தகுதியுடையவர்க்கு வழங்கிப் பிறர்க்குத் தீங்கு அறியாத வாழ்க்கை நடத்தவும், கல்வியால் தம்மொடு மாறுபட்டவரைத் தமது கல்வியான் வென்று, ஏறுபோல் தலை எடுத்து நடந்து தலைமைபெறவும் செல்வதே எமக்கு இயல்பு" (புறம். 47) எனக் கூறுகின்றார்.

இப்படிப்பட்ட வாழ்க்கையுடைய இப்புலவர், உறையூரில் சோழன் இருப்பதைக் கேட்டறிந்து அங்குச் சென்றார். அளவற்ற மகிழ்ச்சியுடன் சோழன் புலவரை வரவேற்றான். அங்குச் சில நாட்கள் தங்கியிருந்தார். விடைபெற்றுத் திரும்பும் போது மிக்க பொருளைப் பரிசிலாக வழங்கினான் சோழன். புலவர் தாம் அங்குக் கண்ட காட்சி களையும் நிகழ்ச்சிகளையும் பிறவற்றையும் பாணன் ஒருவற்குக்கூறி ஆற்றுப்படுப்பதுபோலக் கூறுகின் றார். அவர் கூறும் நிகழ்ச்சிகளிற் சில:

1. அவன் மெய்வன்மையால் வீரராகிய ஆடவர் அவனைப் பணிந்தொழுகுவது; 2. அவன் மறம் நீங்காவீரர், மன்னன் எம்மைப் புட்பகைக்கு ஏவான் ஆகலின் எம்மிற்பொருது மடியக்கடவேம் என்று தம்முடைய பூரித்த தோள்களைத் தட்டுவது; 3. வீரர்களின் விருப்பம் அறிந்த அரசன் அவர் களின் விருப்பம் தணிவதற்குக் காரணமாகிய பறை யறைவது; 4. அதனை யானைகள் செவிதாழ்த்திக் கேட்பது முதலியனவாம்.

## சோழனின் கொடைத்திறம்

கோவூர்கிழார் கூறும் பாடல் ஒன்றில் (புறம். 68) அவன் கொடைத்திறம் வெளிப்படுகிறது. அது, "உடும்புரித்தாற்போன்ற எலும்பெழுந்த விலாப் புறங்களையுடைய சுற்றத்தாரின் மிக்க பசியைத் தீர்ப்பாரைக் காணாது வருந்துகின்ற பாண! இங்கு என்ன செய்கின்றாயோ? உயர்ந்த பூண்களையணிந்து மகளிர்பால் மென்மையுடையவனாய் இனிதிருப்பவ னும், ஈன்றணிமை தீர்ந்த குழந்தைக்குப் பால் சுரக்கும் மார்பினைப்போல நீர்மிக்க காவிரியாறு

பாயும் சோழநாட்டு மன்பதைகட்குத் தான் உயிரெனக் கருதி பேணுவோனும் ஆகிய உறந்தை மன்னனைச் சென்று காணின், அவன், நீ பிறரிடம் பரிசுக்காகச் செல்லாவண்ணம் நல்குவன்" என்பது.

மீண்டும் ஒருகால் நம் புலவர் நலங்கிள்ளியிடம் செல்ல நேர்ந்தது. அப்போது அரசனைப் பார்த்து "வேந்தே! உன் நாடறிய அரவின் விடம்போலும் வறுமையால் வாடுபவர்க்கு யாம் கொடுத்தல் கைகூடும்படிஎமக்குப்பரிசில்வழங்குக" (புறம்.382) என்று கேட்கின்றார். பெற்ற பின்னர் அவன் வீரத்தையும் வண்மையையும் ஒருங்கு சேர்ந்து, நலங்கிள்ளி தன் பகை கடிதலன்றியும் சேர்ந்தோர் பசிப்பகை கடிதலும் வல்லன் (புறம். 400) எனவும், பலர் துஞ்சவும் தான் துஞ்சாது உலகு காப்போன் (புறம். 400) எனவும் வாழ்த்தி அளித்த பொருள் களைப் பெற்றுத் திரும்புகிறார்.

புலவர் புகழுரை

ஆலத்தூர்கிழார் என்னும் புலவர், அவனுடைய படை மிகுதியைப் புகழ்கின்றார் (புறம். 225). அக்கருத்து, சற்று உயர்வு நவிற்சியாகக் காணப்படினும் இவ்வேந்தனின் படைப் பெருக்கம் ஏனைய மன்னரிடமிருந்த அளவினைக் காட்டிலும் மிகுதியானது என்று கொள்ளவேண்டும். அவர் கூறுவது: படை எடுத்துச் செல்லும்போது முன்செல்லும் படையாகிய தூசிப்படையிலுள்ளோர், போகின்ற வழியிலுள்ள பனைமரங்களிலுள்ள, இனிய நுங்கினை உண்கின்றனராம். அவர்க்குப்பின் செல்பவர் பனம்பழத்தின் இனிமையைச் சுவைக்கின்கிறார்களாம். இறுதியில் செல்பவர்கள்

பனம்பிசிரையும் நெருப்பிலிட்டுச் சுட்ட கிழங் கினையும் நுகர்கின்றார்களாம் (புறம். 225). இவ் வாறு ஒழுங்காக அணிவகுத்துச் செல்லும் படை ஞர் கடல் போன்றவராய் இருப்பின் அன்றோ நுங்கு உண்டாகும் காலத்தில் புறப்பட்ட வீரர் களில் முன்னணியிற் செல்வோர் நுங்கினை நுகர வும், பின்னணியில் செல்வோர் கிழங்கு நுகருங் காலத்தில் சென்றுகொண்டிருக்கவும் முடியும். எத் தனைத் திங்கள்கள் இடையே உருண்டோடியிருக் கும்! மாதங்கள் பல கழிந்தும் படைவீரர் அணிகள் போய்க்கொண்டே இருந்தன எனின் அவர்களின் எண்ணிக்கையை அளந்தறிய முடியுங்கொல்? எனவே எண்ணற்ற படைவீரர்களைக்கொண்டது நலங்கிள்ளியின் படை என்பது ஒருவாறு கொள் ளக்கிடக்கிறது.

## அரசனின் பாடல்கள்

இம்மன்னர் பெருமான் பாடலியற்றும் வல் லமையுடையோன் என்று முன்கூறினோம். ஆத லால் அவனியற்றிய பாடல்களைக் காண்போம். காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளியிடமிருந்து உறையூரைப் பெற்றுப்பின் அங்கு அரசுபுரிந்து வந்தான். வருகையில் ஒருநாள் நாளோலக்க மண்டபத்தில் சான்றோர் சூழவீற்றிருந்து தன் நாட்டுக் குடிகளின் முறைகளையும் குறைகளையும் கேட்டு, அவற்றை நீக்க ஆவன புரிவதற்காகக் காட்சிக் கெளியனாய் விளங்கினான். அப்போது அரசு முறைமைபற்றிப் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவையின் கண் விளங்கிய பலரும்

அரசு முறைமையின் அருமையும், அரசாள்வோர் நாடு காத்தற்கண் அடையும் இடுக்கண்களையும் பற்றிப் பலவாறு பேசினர். இறுதியாக அரசர் பெருமான், அ ர சு மு றை மூத்தோர்க்குப்பின் அவர் வழிவரும் இளையோர்பால்வரும் தாய முறையினை யுடைத்து. அதனை எய்தினேன் பெருஞ் சிறப்பெய்தி விட்டதாகக் கருதி அளவற்ற வரியினை விதித்துக் குடிகளிடம் இரந்தும் பொரு ளீட்டக் கருதினன் ஆயின், அவற்கு அரசுமுறை பொறுத்தற்கரிய சுமையாய்ச் சிறப்பின்றி ஒழியும். அவ்வரசுகெழுதிரு ஆட்சி செய்தற்கேற்ற அறி வும் போர்வன்மையும் உடைய விழுமியோன் பெறுவானாயின், அவனுக்கு அது ஆழமான நீர் வற்றின குளத்தில் உள்ள நொய்தான நெட்டி (தக்கை)போல மிகவும் எளியதாம் என்று தன் கருத்தை மிகச் சிறந்த முறையில் பலரும் எளிதில் விளங்கிக்கொள்ளும் பொருட்டுத் தக்க உவமை களைக்கொண்டு பாட்டின் இறுதியில் விளக்கிக் கூறி யுள்ளான். அப்பாடல் வருமாறு:

மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்
பால்தர வந்த பழவிறல் தாயம்
எய்தினம் ஆயின் எய்தினம் சிறப்பெனக்
குடிபுர இரக்கும் கூரில் ஆண்மைச்
சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே
மண்டமர் பரிக்கும் மதனுடை நோன்றாள்
விழுமியோன் பெறுகுவ னாயின் ஆழ்நீர்
அறுகய மருங்கில் சிறுகோல் வெண்கிடை
என்றூழ் வாடுவறல் போல நன்றும்
நொய்தா லம்ம தானே, மையற்று

விசும்புற வோங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்தர் அரசுகெழு திருவே (புறம். 75).

திணை: பொதுவியல். துறை: பொருண் மொழிக்காஞ்சி.

[மூத்தோர்—தம் குடியில் முதியோர்; உய்த்தென—கொண்டு போயிற்ருக; பால்—விதி; தாயம்—அரசுரிமை; குடிபுர இரக்கும்—இறைவேண்டி இரக்கும்; கூரில்—மிகுதியில்லாத; சிறந்தனறு—தாங்கமுடியாத கனத்தது. மண்டமர்—அடுத்துப் பொரும்; மதனுடைய—மன எழுச்சியை; நோன்ருள்—வலிய முயற்சியை; அறுகயம்—அற்றகுளம்; வெண்கிடை—தக்கை; என்றூழ்—(வெயில்) கோடைகாலத்தில்; வறல்—சுள்ளி; மையற்று—குற்றமற்று.]

இனி அம்மன்னன் இயற்றிய மற்ருெரு பாடலைப் பார்ப்போம். சோழன் நலங்கிள்ளிக்கும் காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளிக்கும் பகைமை உண்டாயிற்று என்றும், நெடுங்கிள்ளி உறையூரிலிருந்து ஆட்சிசெய்து வந்தான் என்றும் முன்பு படித்தோம். நாள் செல்லச் செல்ல பகைமை முற்றிக்கொண்டே வந்தது. நெடுங்கிள்ளி நலங்கிள்ளியின் சினத்தைத் தட்டி எழுப்பும் முறையில் இகழ்ந்து பேசினுன். நெடுங்கிள்ளி கூறிய அவ் விழிவுரைகளை ஒற்றர் வாயிலாகக் கேட்டறிந்த நலங்கிள்ளி, போருக்குத் துணிந்து நின்ருன். போர்செய்யத் தொடங்குமுன் வஞ்சின மொழிகள் பல கூறினுன் நலங்கிள்ளி. அம்மொழிகள் அவன் கொடை உள்ளத்தையும், போர்க்கஞ்சாத அவன், வன்கண்மையையும், பாடல் இயற்ற வல்ல அவன் புலமையையும், தனக்குரிய துணைவியுடன் கூடி நல்வாழ்வு வாழாது பொய்யை மெய்யெனக் காட்டி ஒழுகும் விலைமகளிர்பால் சென்று வாழும் தீயொழுக்கத்தை எவ்வாறு அவன் வெறுத்தான் என்பதையும் நன்கு விளக்குகின்றன. அவ்வஞ்சின மொழிகளின் திரண்ட கருத்து வருமாறு:

பகைவனுகிய நெடுங்கிள்ளிக்கு என் அரசுரிமையைக் கவர்வதே கருத்தாயின், மெல்லவந்து என் அடியிணையில் வணங்கி, நின் அரசுரிமை வேண்டும் என இரப்பானுக. அவ்வாறு செய்யின அற்பமாகிய இவ்வரசு எனக்கு எம்மாத்திரம்? என் இன்னுயிரைக் கேட்பினும் கொடுப்பேன். தூங்கிக்கொண்டிருக்கும் புலியைப்போன்ற என் பேராற்றலை எண்ணிப்பாராமல், என் வீரத்தைப் பழித்துக் கூறும் அவ்வரசன் அப்புலியைத் தன் காலால் இடறிய குருடன்போல்வான். அக்குருடன் அப்புலியின் சீற்றத்தினின்றும் எவ்வாறு தப்பிச் செல்ல முடியாதோ அதுபோல அழிவான். இக்கருத்துக்களைத் "துஞ்சுபுலி இடறிய சிதடன்போல உய்ந்தனன் பெயர்தலோ அரிதே" என்ற இன்சொற்களால் சொல்கின்ருன் நலங்கிள்ளி.

மற்றும் தன் வீரத்தைப் புலப்படுத்த விரும்பிய அம்மன்னன், வேருெரு உவமையையும் கூறுகின்ருன். அது, "மிக்க வலியையுடைய இளைய மூங்கிலைத் தின்னும் யானையின்காலில் அகப்பட்ட சிறு மூங்கில்முளை அழிவதை யொப்ப, அவன்மேற் சென்று யான் தாக்குவதால் அவன் அழிவான் என்று கூறுகின்ருன். அவ்வாறு செய்யாது ஒழியின் பொய்யை மெய்யெனக் காட்டி ஒழுகும் பொதுப் பெண்டிரின் பொருந்தா முயக்கத்தால் என் மார்பில் அணிந்துள்ள மாலை குழைவதாக" என்னும் கருத்துக்களை,

மெல்ல வந்தென் னல்லடி பொருந்தி
ஈயென இரக்குவ ராயின் சீருடை
முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்
இன்னுயி ராயினுங் கொடுக்குவ னிந்நிலத்
தாற்ற லுடையோ ராற்றல் போற்றுதென்

*உள்ள மெள்ளிய் மடவோன் றெள்ளிதிற்*
*றுஞ்சுபுலி யிடறிய சிதடன் போல*
*உய்ந்தனன் பெயர்தலோ அரிதே மைந்துடை*

* * * * *

*கழைதின் யானைக் காலகப் பட்ட*
*வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்*
*வருந்தப் பொரே ஞுயிற்பொ ருந்திய*
*தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்*
*பல்லிருங் கூந்தல் மகளிர்*
*ஒல்லா முயக்கிடைக் குழைகஎன் தாரே''*

என வரும் பாவாக இயற்றினான் அவ்வேந்து.

முடிவுரை

இத்தகைய மனவெழுச்சி மிக்க பெருவேந்த னோடு நெடுங்கிள்ளி பொருது வெற்றிகொண் டிருக்க முடியுமா? அவ்வாறு எண்ணுவதும் வீணே. காரியாற்றில் நடந்தபோரில் அவ்வேந் தன் இறந்தமையால்தான் அவன் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி எனப்பட்டான்போலும். தம் பெருமையை மறந்து இரவலர்போலப் பகை யரசர் வந்து தன் இனிய உயிரைக் கேட்பினும் கொடுப்பதில் தடையில்லை என்று கூறுகின்ற நலங் கிள்ளியின் துணிபுதான் என்னே! இனிய செய் யுள் செய்யும் இவ்வேந்தனின் செந்நாப்புலமையை என்னென்று கூறுவது! அவன் உள்ளமும் புலமை யும் வாழ்க என வாழ்த்தி அமைவாம். ஒழுக்கத் தின் சிறப்பினைப்பற்றி—இருபாலார்க்கும் அமைந் திருக்கவேண்டிய, இன்றியமையாத கற்பினைப்பற்றி இவனைப்போன்று தாம் பாடிய பாடலின் இடையே அழகுபெற உலகினர்க்கு உணர்த்திய தமிழறிந்த மன்னர்கள் வேறு எவருளர். எவரும் இலர் என்று துணிந்து கூறலாம் அன்றோ? வாழ்க தமிழ் அறிந்த இம்மன்னன் புலமை.

# கட்டுரைப் பயிற்சி

1. அரசர் சேரரும் புலவர் மோசியும்.

2. அறிவுடை நம்பியின் புலமை.

3. இளம்பெருவழுதியின் நற்பண்புகள்.

4. கிள்ளிவளவன் பண்ணன்—நட்பு.

5. நெடுஞ்செழியன் பெற்ற புலவர் புகழுரை.

6. நலங் கிள்ளியின் பேரறிவுடைமை.

7. புலவர்கள் புரவலர்களால் ஆதரிக்கப்பட்ட முறை.

8. புலவர்களின் கடமை உணர்ச்சி.

9. தமிழறிந்த மன்னர்களும் தமிழ் நாடும்.